# கந்தளாய்
# சதுர்வேதி மங்கள நாயகி சமேத
# சதுர்வேதி மங்களநாதர் பெருங்கோவில்



## நவகுண்ட அஷ்டபந்தன
## மகா கும்பாபிஷேக பெருவிழா மலர்
## 24.03.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் சதுர்வேதி மங்கள நாயகி சமேத சதுர்வேதி மங்களநாதர் பெருங்கோவில் நவகுண்ட அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா மலர்

## 24.03.2023



ஆலய பரிபாலனசபை

பேராறு, கந்தளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

பாலினால் நறுநெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங்குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான் கணபதியீச்சரந்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- அருளாசியுரைகள்
    - சிவஸ்ரீ இராச அமிர்தேஸ்வரக் குருக்கள் அவர்கள்
    - சிவஸ்ரீ செல்வப் பிரசாந் ஐயா அவர்கள்
- வாழ்த்துச் செய்திகள்
    - திரு. இரா.சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் திருகோணமலை மாவட்டம்
    - திரு. உதயகுமாரன் குமணன்
      உதவிப் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், கந்தளாய்
    - திரு.ந. சதீஸ்குமார், அதிபர், பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம், கந்தளாய்
    - திருமதி. லிங்கேஸ்வரி ரவிராஜன், அதிபர்,
      ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் தேசிய பாடசாலை, திருகோணமலை
- ஆலய நிர்வாக சபை உறுப்பினர்களின் விபரம்
- ஆலய தொண்டர் சபை உறுப்பினர்களின் விபரம்
- படங்கள்
- வெளியீட்டுரை - ஆலயத் தலைவரின் உள்ளத்திலிருந்து
- கட்டுரைகள்
    - கந்தளாய் சிவன்கோயில் பண்டிதர் R. வடிவேல்
    - கந்தளாய் சோழர் கால சோழீஸ்வரம் திரு.S. மகேந்திரராசா
      ஓய்வுபெற்ற மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர், திருகோணமலை
    - இலங்கையில் கிடைத்த தமிழ் சாசனத்தில் முதன்முதலாக
      திருப்பள்ளியெழுச்சி என்ற சொல் பேராசிரியர் S. பத்மநாதன்
    - கந்தளாயில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய தமிழ்க் கல்வெட்டு
      கலாநிதி P. புஷ்பரட்ணம்
    - கிழக்கிலங்கையில் சீரழிந்து கொண்டிருக்கும் தமிழரின் தொன்மைச் சான்றிதழ்
      கலாநிதி P. புஷ்பரட்ணம்
    - திருகோணமலையின் தொல்பொருட்சின்னங்கள்
      கலாநிதி P. புஷ்பரட்ணம
    - கோயிலும் குடிகளும் - திரு.N.சுந்தரலிங்கம்
    - சகல சௌபாக்கியமளிக்கும் பிரதோச வழிபாடு - திரு.மோ.அசோக்குமார்
    - தஞ்சைப் பெருங்கோவிலின் சிறப்புக்கள் - (வி.துவாரகா - 12 உயர்தரம்)
    - எண்திசைகள் யானைகள் - (T. தனுக்ஷன் - 12 உயர்தரம்)
    - சிவன் - ஆதிசக்தி
    - புகழ்பெற்ற சிவத்தலங்கள், சிவவிரதங்கள் (N. அனுசியா)
    - சிவன் - (அபிநயா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவாலய மகா கும்பாபிஷேக பிரதம குருக்களின் ஆசிச் செய்தி

**தி/ கந்தளாய் சதுர்வேதி மங்களபுரம் சிவனாலயம்**

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய கந்தளாய் சதுர்வேதி மங்கள நாயகி சமேத சதுர்வேதி மங்கள நாதர் ஆலய மகா கும்பாபிஷேகம் இறைவன் திருவருள் துணை கொண்டு நிறைவேறியுள்ளது .இறை தொண்டு என்பது எல்லோரும் செய்வதற்கு பலன் கிடைக்காது. மணிவாசக சுவாமிகள் சிவபுராணத்தில் சிவன் அவன் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என விவரித்துள்ளார். அது போல் ஞானசம்மந்தப் பெருமானின் என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து முன்னம் நீ புரி நல்வினைப் பயனிடை முழு மணித்தருணங்கள் எனும் வரிகள் இறை இன்பத்தை விவரிக்கின்றன.

இவ் இறை பணியை செய்வதற்கு அல்லது பார்ப்பதற்கு முடிந்துள்ளதெனில் அது இறைவனின் திருவருளே.

நாம் நல்ல காரியங்களை செய்தால் நிச்சயமாக நல்லது நடக்கும் , பலன் கொடுக்கும். இறை பணி என்பது மற்றவர்களுக்காக செய்யும் விடயம் அல்ல.ஆகவே இறைவனின் கைங்கரியத்தை இறை பக்தியுடன் செய்யுங்கள் இறையருள் கிடைக்கும்.

நான் எனும் அகம் பாவம் எப்போது ஒரு மனிதனிடத்தில் விலகுகின்றதோ அப்போது தான் ஆறறிவு படைத்த மனிதர்களாக வாழ முடியும்.

மானிடர்கள் என்று சொல்லிக் கொண்டு பாவச்செயல்களை செய்யக்கூடாது.


நாம் பக்குவப் படவேண்டும் என்பதற்காக இறைவன் ஒவ்வொரு அவதாரம் எடுத்து ஒவ்வொரு கொடிய விலங்குகளையும் தனது வாகனம் ஆக்கிக் கொண்டுள்ளான். அதற்காக எல்லா உயிர்களிடத்திலும் நீ அன்பு செலுத்த வேண்டும் என்பதற்காக நாம் அவ் வழியில் சென்றால் தான் இறைவனை அடைய முடியும்.

எனவே நாம் எல்லோரும் அவனுடைய பிள்ளைகள் அறம் தவறாமல் நின்றால் நமக்கு துன்பம் இல்லை என்று கூறி இறைவனுடைய திருவருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும் என பிரார்த்திப்பதுடன் எனது ஆசிகளும் உரித்தாகட்டும்.

இராச அமிர்தேஸ்வர குருக்கள்
வவுனியா வடக்கு
நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமிகள்
ஆலய உற்சவ கால குரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

# திருகோணமலை கந்தளாய் பேராறு சதுர்வேதி மங்களபுர சிவாலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

சாதக இளஞ்சுடர்
சிவஸ்ரீ செல்வப் பிரசாந் ஐயா

லங்கா புரியின் பூர்வபாகத்தில் கந்தளாய் பேராறு எனும் ஷேத்திரத்தில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் சோழீஸ்வர நாயகி சமேத சோழீஸ்வரர் பெருமானுக்கு நவ குண்டபட்ஷ கும்பாபிஷேகம் நடைபெற்றதையிட்டு அகமகிழ்ச்சி அடைகின்றோம்.12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேகம் மகா கும்பாபிஷேகம் ஆகும். ஆலயத்திற்கும் ஊருக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதே இந்தக் கும்பாபிஷேகம் ஆகும். மனித வாழ்வை உயர் நிலை அடையச் செய்வது ஆலய வழிபாடாகும்.

இதனை "நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக" என்றும் "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் "ஆலயம் தொழுவது சாலமும் நன்று" என்றும் நம் சமயத்தவர்கள் எடுத்துரைத் திருக்கின்றனர். இதனை உணர்ந்து நெய்தல் நிலத்தில் வாழும் கந்தளாய் பேராறு சைவத் தமிழ் மக்களை காத்தருளும் தெய்வமாய் விளங்கும் சோழீஸ்வர பெருமான் ஆலயத்தை கட்டியெழுப்பி புணரமைப்புடனும் புதுப் பொலிவுடனும் அமைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

ஆலயத்தில் நடைபெறும் நித்திய பூஜைகள் விழாக்கள் அனைத்தும் சிறப்பாக நடைபெறுவதன் மூலம் மனித வாழ்வு மேன்மையடைகிறது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அரிய பிறவியாக மானிடப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் இறைவனை வழிபாடு செய்வதே ஆன்ம ஈடேற்றம் ஆகும். இக் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்திய சிவாச்சாரியார்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் கந்தளாய் வெளிநாட்டு வாழ் சோழீஸ்வர பெருமானின் அடியவர்களுக்கும் எம் பெருமானின் ஆசி கிடைக்க வேண்டி பணிகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அவர்களின் சோழீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி

தட்சண கைலாயம் எனப் போற்றப்படும் குரைகடல் ஓத நித்திலம் கொழிக்கும் திருக்கோணமலை மாவட்டத்தில் மிகப் புராதன பிரதேசமாகிய கந்தளாயில் பேராறு கிராமத்தில் பழம்பெரும் சிவன்கோயிலான "சோழீஸ்வரர் ஆலயத்தின் குடமுழுக்கு வைபவம் 24-03-2023 எம்பெருமானின் அருளால் நடைபெறுவதையிட்டு பெரும் மகிழ்வு அடைகின்றேன்.

புராதன வரலாற்றுப் பின்னணி பலவற்றைக் கொண்டுள்ள இப்பிரதேசத்திற்கு கண்தலை , கந்தளை, கந்தளாய் என்று திரிபு பெற்று வெவ்வேறு பெயர்களில் இருந்து வருகின்றன. இற்றைக்கு 1500 வருடங்களுக்கு முன்னர் குளக்கோட்டு மன்னனால் உண்டாக்கப்பட்ட கந்தளாய்க் குளத்தை அண்டியபிரதேசத்தில் தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் கந்தளாயில் இருந்து வந்தன. 1952ற்குப் பின் கந்தளாயிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் இலங்கை அரசாங்கம் குடியேற்றத் திட்டங்களை செயற்படுத்திய போது அங்கு குடியேறியவர்கள் நிலத்தை செப்பனிடும் வேளையில் பிள்ளையார், அம்பாள், விஷ்ணு போன்ற இந்து சமய திருவுருவங்களை கண்டெடுத்தனர். இவை இந்நியாவில் சோழராட்சி மகோன்னத நிலையில் இருந்த போது அவர்களின் செல்வாக்கினால் இலங்கையிலும் பல சிவாலயங்கள் கட்டியெழுப்பப்பட்டது. அவ்வாறு கட்டப்பட்டதே இச்சிவாலயமாகும்.

கி.பி. 1010ம் ஆண்டு இராஜேந்திரசோழனால் கட்டப்பட்ட சிவன்கோயிலே கந்தளாயில் கட்டப்பட்ட சிவன்கோயிலாகும். இந்தச் சிவன் கோயில் தமிழர்களின் வரலாற்றையும் சைவ சமயிகளின் வரலாற்றையும் கூறுகின்றது. இவ்வாலயம் காலப்போக்கில் மண்ணில் சிதைந்தும், புதைந்தும் புதையாமலும் காட்சியளித்தது. இராஜேந்திர சோழனால் கட்டப்பட்டு அழிந்து போன இக்கோயில் 1952ம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டது. பின்னர் 1975ம் ஆண்டு ஆனி மாதம் அங்கு குடியேறியவர்களின் பெரும் முயற்சியால் குடமுழுக்கு வைபவம் இனிதே நடைபெற்றது. இக்கோயிலுள்ள கருவறையில் நிலத்தில் இருந்து வெளிப்பட்ட சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. மீண்டும் 2004-09-03 நடைபெற்ற கும்பாபிஷேசத்தில் எனக்கும் பங்குபெற்ற இறையருள் கிட்டியது. வராலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வாலயத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்கு சோழீஸ்வரர் ஆலய திருப்பணிச் சபையினரின் பாரிய முயற்சியால் பல இன்னல்களிற்கும் இடையூறுகளிற்கும் மத்தியில் புனர்நிர்மாணிப்புச் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் கைகூடியது.

சிவனென்னும் சொல்லிற்கு மங்கள வடிவானவன் என்பது பொருள். தானும் மங்கள வடிவோடு விளங்கி தன்னை வழிபடும் அடியார்களையும் மங்களமாக வாழவைப்பவர் சிவபெருமான்.

"தென்னாடுடையசிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறவைா போற்றி" என்று சிவபெருமானின் பாதாரவிந்தங்களில் விழுந்து வணங்கி எல்லாம் வல்ல சோழீஸ்வரப் பெருமான் சகலரிற்கும் அருள்பாலிக்க வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்,

இரா.சம்பந்தன்,

பாராளுமன்ற உறுப்பினர்,

திருகோணமலை மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச் செய்தி

தெட்சண கைலாயம் என்றும் சிவபூமி என்றும் விழிக்கப்படும் இன்றும் அதிகளவில் சிவாலயங்களைக் கொண்ட மாவட்டமான கிழக்கிலங்கையின் கடலலை தாலாட்டும் திருக்கோணமலை மண்ணிலே மாநகரிலிருந்து கண்டி செல்லும் பாதையில் நாற்பது கிலோமீற்றர் தொலைவில் பசுமை போர்த்திய வயல் நிலங்களைப் பெருமளவில் கொண்ட பிரதேசமான கந்தளாய் பிரதேசத்தில் பேராறு எனும் ஊரில் கந்தளாய் சோழீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. திருக்கோணமலையின் அருட்பெருமையும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட சிவாலயங்களில் இக் கந்தளாய் சோழீஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும்.

11ம் நூற்றாண்டில் இலங்கைத் தீவினை ஆட்சி புரிந்த சோழ மன்னனான ராஜேந்திர சோழனால் நிர்மாணிக்கப்பட்ட இவ்வாலயமானது சோழர் கால ஆட்சியின் பின் அழிவடைந்ததுடன் 1950 களில் குடியேற்றப்பட்ட பக்தர்களினால் மீண்டும் மடாலயம் அமைத்து வழிபடப்பட்டு வந்தது. இவ்வாலயமானது 1990 களின் பிற்பகுதியில் சிவாகம முறைப்படி அமைக்கப்பட்டு 2004 இல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் 2017 ம் ஆண்டிலே பாலஸ்தான நிகழ்வுகள் இடம்பெற்று எழில்மிகு தோற்றத்துடன் வடிவமைக்கப்பட்டு தற்போது கும்பாபிஷேகப் பெருவிழா காண்கின்றது.

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு இப்பிரதேசத்தின் சைவப் பெருமக்கள் ஆற்றிவரும் பங்களிப்பினை பெரிதும் மெச்சுவதுடன் ஆலயத்தின் கும்பாபிஷேக மலருக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

இத்தருணத்தில் பிரதேசத்தில் வாழும் அனைத்து மக்கள் வாழ்விலும் சோழீஸ்வரப் பெருமான் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

திரு. உதயகுமாரன் குமணன்
உதவிப் பிரதேச செயலாளர்
கந்தளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

திருமூலரால் சிவபூமி என அழைக்கப்படும் இலங்கைத் திருநாட்டில் தெட்சண கைலாயம் எனப் போற்றப்படும் கோணநாதப் பெருமான் அருள்புரியும் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் பேராறு பதியினிலே அமர்ந்து அருள் புரியும் சோழீஸ்வர நாயகி சமேத சோழீஸ்வர நாதனின் அருளை வேண்டியவனாக இவ்வாலயமானது சோழ மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்த போது அவர்கள் ஆட்சியின் கீழ் இருந்த பல இடங்களிலும் சிவாலயங்கள் பல அமைக்கப்பட்டன. அவ்வாறு அம்மன்னர்களால் அமையப்பெற்ற ஆலயமே எமது சோழீஸ்வர ஆலயமாகும். இவ்வாலயம் பல தொல்பொருட் சின்னங்கள் காணப்படும் மிகத் தொன்மையான வரலாற்றுச் சிறப்பை உடைய ஆலயமாகும். இவ்வாறு பெருமை பொருந்திய சோழீஸ்வர நாயகனை போற்றி வழிபடுவதற்கு கந்தளாய் வாழ் சைவமக்கள் பாக்கியம் செய்தவர்களாவர். இப்பாக்கியத்தினை போற்றுதற்கேற்ப,

"ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான்தாள் வாழ்க"

ஆகமம் இறைவனிடம் இருந்து தோன்றியதாகும் இறைவன் ஆன்மாக்களுக்கு அண்மையாக இருத்தலாகும். அதாவது உயிர்கள் தன்னை அணுகி தனக்கு அண்மையில் தன்னிடம் சென்று ஆறுதல் பெற்று மானுட வாழ்க்கையில் இருந்து விடுதலை அடையும் படி செய்பவன் இறைவன் ஒருவனே ஆவான் என்பதற்கு ஏற்ப எமது கந்தளாய் வாழ் மக்களும் எமது ஆலயத்தை ஆகம முறைப்படி சகல அம்சங்களுடனும் அமைக்கப்பட்டு புணருத்தாரணம் செய்துள்ளார்கள். இக்கைங்கரியத்தை முன்னாள் நிர்வாகத்தினரும், இந்நாள் நிர்வாகத்தினரும் முன்னின்றதுடன் அதற்குப் பக்க பலமாக கந்தளாய் வாழ்மக்களும் சிவபெருமானின் அருளாசியுடன் ஒத்தாசையுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு அழகிய ஆலயமாக சிறப்புற அமைத்துள்ளார்கள். இதுவரை காலமும் அலங்காரத் திருவிழாவாக நடத்தப்பட்டு வந்த உற்சவமானது தற்போது அழகுற கொடித்தம்பம் அமைத்து மகோற்சவ திருவிழாவாக நடாத்தப்படும் வகையில் சிறப்பான உன்னத கைங்கரியத்தை செய்துள்ளார்கள்.

இதன்மூலம் 2023-03-24 கும்பாபிஷேக குடமுழுக்கு செய்வதற்கு இறைவன் திருவருள் கூடியுள்ள இவ்வேளையில் கந்தளாய் வாழ் மக்களின் பெருஉதவியினால் அடுத்துவரும் சந்ததியினருக்கு சைவசமய வணக்க வழிபாட்டினை முன்கொண்டு செல்வதற்கு ஏற்ற வகையில் "அவனருளாலே அவன்தாள் வணங்கி" உலகஉயிர்களின் நிலைபேறான வாழ்க்கையானது இறைவனுடைய திருவடி நிழலேயாகும் என்பதை மானிடராகிய நாம் உணர்ந்து எம்பெருமானின் அருளை வேண்டி கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துக்களை வழங்குவதற்கு பெரும் பாக்கியம் கிடைத்தமையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

திரு.ந.சதிஸ்குமார்
அதிபர்
பேராறு பரமேஸ்வரா ம.வி – கந்தளாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

நாயன்மார்களால் பாடப்பெற்ற திருத்தலங்கள் நிறைந்த திருகோண மலை மாவட்டத்தில் கந்தளாய் எனும் பிரதேசத்தில் நீர்வளமும் பார்க்கும் இடமெல்லாம் பச்சைப் பசேல் எனத் தோற்றமளிக்கும் அழகிய வயல் வெளிகளைக் கொண்ட நிலவளமும் நிறைந்த பேராறு எனும் கிராமத்தில் மன்னர் இராஜேந்திர சோழனால் பதினோராம் நூற்றாண்டில் நிர்மானிக்கப்பட்ட சதுர்வேதி மங்கள நாயகி சமேத சதுர்வேதி மங்கள நாயகன் வீற்றிருக்கும் சிவாலயத்திற்கு குடமுழுக்குப் பெருவிழா நடைபெற இறையருள் கூடியதையிட்டு மிகுந்த மனமகிழ்வெய்துகின்றேன்.

அழிவடைந்த நிலையில் காணப்பட்ட சிவாலயத்தை 1955ம் ஆண்டு கந்தளாய் குடியேற்றத்திட்டத்தில் குடியேற்றப்பட்ட மக்கள் கண்ணுற்று 1975 ம் ஆண்டு முதலாவது கும்பாபிஷேகமும், 2004ம் ஆண்டு 2ம் கும்பாபிஷேகமும், 2023ம் ஆண்டு 3ம் கும்பாபிஷேகமும் நடைபெறுகிறது.

தற்போது புனருத்தாபனப் பணிகள் நிறைவுற்று ஆலயம் புதுப்பொலிவுடன் திகழ்வதைப் பாரக்கும் போது மனதில் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுவதுடன் இக்கைங்கரியம் சிறப்பாக நடைபெறுவதற்கு இரவு பகல் பாராது உழைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும், ஊர் மக்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இப்புராதன சிவாலயமானது மேன்மேலும் சிறப்புடன் திகழ்ந்து பிரதேச மக்களுக்கு தொடர்ந்தும் நல்லருளை வழங்க எம்பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

திருமதி லிங்கேஸ்வரி ரவிராஜன்
அதிபர்
ஸ்ரீ.சண்முகா இந்து மகளீர் கல்லூரி (தேசிய பாடசாலை)
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகசபை அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| போசகர்கள் | - | திரு. யோ.யோகநாதன் |
| | | திரு. பா.கேதீஸ்வரன் |
| தலைவர் | - | திரு. க. ரவிராஜன் |
| உப தலைவர் | - | திரு. தெ. அமலேந்திரன் |
| செயலாளர் | - | திரு. பா. சாந்தரூபன் |
| உப செயலாளர் | - | திரு. நா. சதீஸ்குமார் |
| பொருளாளர் | - | திரு. நா. சுந்தரலிங்கம் |
| உறுப்பினர்கள் | - | திரு. பே. வசந்தன் |
| | | செல்வன். சா. பிரணவன் |
| | | செல்வன். சி. ஜேக்கப் |
| | | திரு. பா. தர்மராசா |
| | | திருமதி. ர. ராசமணி |
| | | திருமதி. பே. கமலேஸ்வரி |
| | | திரு. க. யோகச்சந்திரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டர் சபை உறுப்பினர்கள்

1. சி.சாந்தரூபன்
2. செல்வகுமார்
3. வசந்தகுமார்
4. சிவா
5. ம.சுகந்தராஜ்
6. சு .கிசாலன்
7. த.தேவன்
8. வீ .நடேந்திரன்
9. ப. விஜயராசா
10. சி.குஞ்சன்
11. வசந்தன்
12. க.திலிபன்
13. மூ.கிந்துசன்
14. த. அருட்செல்வம்
15. து.நிலக்சன்
16. மு .தர்மசீலன்
17. க.மணியம்
18. மூ.சுகந்தினி
19. பாரதி
20. நித்தியானந்தி
21. சா.மஞ்சுளா
22. கௌரிதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1975ம் ஆண்டு இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வுகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2004ம் ஆண்டு இடம்பெற்ற கும்பாபிஷேக நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017ம் ஆண்டு இடம்பெற்ற பாலஸ்தாபன நிகழ்வுகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023ம் அண்டு இடம்பெற்ற மகா கும்பாபிஷேக நிகழ்வுகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பிரதான கும்பத்தை சுமந்து வரும் யானை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய திருப்பணிச் சபையின் தலைவரின் உள்ளத்திலிருந்து



இலங்கைத் திருநாட்டின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் குளமும் ஆறுகளும் மருதமும் ஒருங்கே அமையப்பெற்று மிளிர்கின்ற கந்தளாய்ப் பிரதேசத்தில் பல ஆயிரக்கணக்கான நெல் மற்றும் உப உணவுப் பயிர்களுக்கு நீரை வாரி வழங்கி வரும் குளக்கோட்டு மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட கந்தளாய்க் குளத்திலிருந்து சுமார் 2.கி.மீ தொலைவில் கந்தளாய் சிவாலயமானது அமைந்துள்ளது.

நாயன்மார்களால் பாடப்பெற்றதும் சிவபூமி என அழைக்கப்படும் திருத்தலங்கள் நிறைந்த திருகோணமலை மாவட்டத்திலே கந்தளாய் பிரதேச செயலகப் பிரிவில் பேராறு எனும் கிராமத்தில் எமது சிவாலயமானது காணப்படுகின்றது. பதினொராம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி புரிந்த சோழ மன்னர்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபாடு இயற்றும் குணம் அமைந்தவர்கள் அவர்களினால் இலங்கையின் பல பாகங்களிலும் சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. கருங்கற்களினால் அமையப்பெற்ற தென்னிந்திய சிற்பக்கலையை உலகுக்கு அறிமுகம் செய்த பெருமைக்குரியவர்கள் சோழ மன்னர்களே. அந்த வகையிலே கந்தளாய் பிரதேசத்திலும் பல சிவாலயங்கள் அமைக்கப் பட்டதாக கூறப்படுகின்றது.

எமது சிவாலயத்தின் வரலாற்றை நாம் ஆராய்வோமாயின் மாமன்னர் இராஜ இராஜ சோழனின் மைந்தர்களில் ஒருவராகிய ராஜேந்திர சோழ மன்னர் இவர் ஒரு கைதேர்ந்த போர்த்தளபதிகளில் ஒருவன் இலங்கை , பர்மா, கடாரம்,சீயம் என நாடுகளைக் கைப்பற்றி சோழர் ஆட்சியை நிறுவிய பெருமைக்குரியவன். இலங்கைத் தீவை சுமார் சோழ மன்னர்கள் ஆட்சி புரிந்த 70 வருட காலப் பகுதியில் மன்னர் ராஜேந்திர சோழனினால் எமது சிவாலயமும் நிர்மாணிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றது. ஆலயத்தை சூழ நான்கு வேதங்களையும் கற்ற அந்தணர்களைக் குடியமர்த்திய சோழ மன்னர்கள் ஆலயம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு சதுர்வேதிமங்களபுரம் எனவும் பிராமண குடியிருப்புக்கள் இங்கு நிறைந்து காணப்பட்டமையினால் கந்தளாய் பிரம்மதேயம் எனவும் பெயர் சூட்டினார்கள். மேலும் ஆலயப் பணிகளுக்கென பல நன்செய், புன்செய் நிலங்களை மானியமாகவும் வழங்கினார்கள். சதுர்வேதி மங்களபுரம் என இப்பிரதேசம் சோழ மன்னர்களால் பெயரிடப்பட்டாலும் மாமன்னர் ராஜராஜசோழனை கௌரவிக்கும் வகையில் ராஜராஜ சதுர்வேதி மங்களபுரம் எனவும் இப்பிரதேசம் அழைக்கப்பட்டது.

மேலும் கந்தளாயில் சோழ மன்னர்களின் படைத்தளங்கள் மாநாட்டு மண்டபங்கள், யானைப்படைகள், குதிரைப்படைகள் என்பனவும் காணப்பட்டதாகவும் ஓர் சமயம் கந்தளாய்ப் பிரதேசத்தில் இருந்தே சோழ மன்னர்கள் ஆட்சியை நடாத்திச் சென்றதாவும் கூறப்படுகின்றது. இவ்வாறு சிறப்பான ஆட்சியை நடாத்திய சோழ வேந்தர்களின் நிலைகுலைவினால் எமது ஆலயமும் வீழ்ச்சியுற்ற போதும் பிற்காலத்தில் மன்னன் விஜயபாகு அவர்கள் எமது ஆலயத்தை ஆதரித்து திருப்பணிகள் செய்தமையினால் எமது ஆலயமானது விஜயராஜ சதுர்வேதிமங்களபுரம் எனவும் அழைக்கப்பட்டது.

இவ்வாறாக சோழமன்னர்களின் ஆட்சிக் காலத்தில் பெரும் செழிப்புற்றிருந்த எமது சிவாலயத்தின் பழமைக்கும் பெருமைக்கும் சான்றாக சிவாலயத்தில் பல ஆவுடையார்களுடன் கூடிய சிவலிங்கம், சேதமடைந்த நடராஜர், பார்வதி சிலைகள், சிற்பவேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய கற்றூண்கள், மிகவும் பெறுமதிவாய்ந்த மூன்று கற்சாசனங்கள் ஆலய வளாகத்தில் கண்டெடுக்கப்பட்டு அவை யாவும் ஒன்றுசேர்க்கப்பட்டு ஓர் தொல்பொருட் காட்சிசாலையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தொல்பொருட் காட்சியகத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் இயங்கும் ஓர் ஆலயமாக எமது ஆலயம் திகழ்கின்றது. ஆலயத்தில் காணப்படும் மூன்று கற்சாசனங்கள் தொடர்பாக பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.பத்மநாதன் அவர்கள் இலங்கையில் இந்துசமயம் எனும் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

1. முதலாவது கற்சாசனத்தில் நாகைச்சாணி எனும் விதவைப் பெண் இறந்த தனது கணவனின் நினைவாக ஆலயத்தில் நிரந்தரமாக விளக்குகள் ஏற்றப்பட வேண்டும் எனும் நோக்கத்திற்காக ஆலயத்திற்கு வழங்கிய பத்துப் பொற்காசுகள் தொடர்பாக குறிப்பிடப்படுகிறது.

2. இரண்டாவது கற்சாசனத்தில் கந்தளாய்க் குளத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள தண்ணிரைப் பயிர்ச் செய்கைக்காக திறப்பது தொடர்பாக ஊர்ப் பெரியவர்கள் ஆலயமுன்றலில் ஒன்று கூடி மேற்கொண்ட தீர்மானங்களைக் குறிப்பிடுகின்றது.

3. மூன்றாவது கற்சாசனம் மன்னர் ஜெயபாகு ஆலயத்திற்கு மேற்கொண்ட திருப்பணிகள் தொடர்பாக குறிப்பிடப்படுவதுடன் அக்கற்சாசனத்தில் திருப்பள்ளி எழுச்சி போன்ற வேறு கற்சாசனங்களில் குறிப்பிடப்படாத சொற்களும் காணப்படுகின்றது என்கிறார்.

இவ்வாறான கீர்த்தி மிக்க சிவாலயம் போர்த்துக்கேசர்களினால் திருக்கோணமலை திருக்கோணஸ்வரம் அழிக்கப்பட்ட சமகாலத்தில் அழிக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. காலப்போக்கில் காடு மண்டி வனாந்தரமாக மாறியதாகவும் கூறப்படுகின்றது.

1955ம் ஆண்டு கந்தளாய்க் குளத்தை மையமாகக் கொண்டு பாரியக் குடியேற்றத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதன்போது முதலாம் இரண்டாம் அலகுகளில் சுமார் 84 சைவக் குடும்பங்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டது. இவ்வாறு காணிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அடர்ந்த காட்டின் நடுவே ஆகாயத்தைப் பார்த்தவாறு ஆவுடையாருடன் கூடிய ஓர் சிவலிங்கத்தை காணும் பாக்கியத்தைப் பெற்றார்கள். மேலும் அக்காடெங்கிலும் அழிவடைந்த நிலையில் தூண்கள், கற்சாசனங்கள், சிலைகள் என்பவற்றையும் காணும் வாய்ப்பைப் பெற்றார்கள். எனினும் தமக்கு வழங்கப்பட்ட மேடு, வயற்காணிகளை துப்பரவு செய்தல், பயிர்ச்செய்கைக்குத் தயார் செய்தல், மலேரியா அச்சுறுத்தல், பொருளாதார நெருக்கடிகள் காரணமாக ஆலயம் தொடர்பாக பெரியளவில் திருப்பணிகள் செய்யும் இயலுமை அவர்களுக்கு இருக்கவில்லை. எனினும் காட்டின் நடுவே காணப்பட்ட சிவலிங்கப் பெருமானுக்கு ஓலைக் கொட்டகை ஒன்றை அமைத்து வழிபட்டு வரலானார்கள். காலப்போக்கில் அவ்விடத்திலேயே அரசினால் 4 ஏக்கர் காணி ஆலயத்திற்கென ஒதுக்கப்பட்டது. இவ்வாறு நான்கு ஏக்கர் காணி அரசினால் ஆலயத்திற்கு வழங்கப்பட்டாலும் அதில் இரண்டு ஏக்கர் காணியை ஓர் தமிழ்ப் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு ஆலய நிர்வாக சபையினால் வழங்கப்பட்டு அது தற்போது பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம் எனும் பெயருடன் இயங்கி வருகின்றது. மிகுதி இரண்டு ஏக்கர் காணிகளிலும் ஓலைகளினாலும், தகரத்தினாலும் மடாலயமாக அமைக்கப்பட்ட ஆலயத்தை ஆதரித்து வழிபட்டு வந்தார்கள். 1975ம் ஆண்டு மடாலயத்திற்கு கும்பாபிஷேகமும் ஆலய நிர்வாக சபையினால் நடாத்தப்பட்டது. மின்சார வசதியின்மை, குடிநீர் வசதியின்மை, சீரான தெருக்கள் இல்லாத ஓர் காலத்தில் அந்தக் கும்பாபிஷேகத்தை நடாத்துவதற்கு ஊர் மக்கள் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்கள் என எண்ணிப் பார்க்கின்றேன். அடியேனும் ஓர் சிறுவனாக கும்பாபிஷேகத்தை காணும் வாய்ப்பைப் பெற்றேன். பெற்றோல்மக்ஸ் நிறைய பாவிக்கப்பட்டது நினைவில் இருக்கின்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இச்சிவாலயத்தைப் பார்வையிட்ட பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் புஷ்பரட்ணம், பேராசிரியர் இந்திரபாலா ஆகியோர் ஆலயத்திற்கு வருகை தந்து அங்கு காணப்படும் கற்சாசனங்களை படிமம் எடுத்து ஆலய வரலாற்றை புத்தகமாகவும் ஆராய்ச்சிக் கட்டுரைகளாகவும் வெளியிடத் தொடங்கிய பின்னரே கந்தளாயில் சோழ வேந்தர்களால் அமைக்கப்பட்ட பல சிவால யங்கள் காணப்பட்ட விடயமும் அதல் நமது சிவாலயம் மாத்திரமே பாதுகாக்கப்பட்டுள்ளது என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய விடயமும் வெளி உலகின் பார்வைக்கு கொண்டு வரப்பட்டது.

இதனை நன்குணர்ந்த ஆலய நிர்வாக சபையினர் இச்சிவாலயத்தை சிவாகம முறைப்படி நிர்மானித்து கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்று எண்ணி அதற்காக அரும்பாடுபட்டதன் விளைவாக ஊர் மக்கள், வெளிநாடுகளில் வசிக்கும் எம்மவர்கள், அரச நிறுவனங்கள் என நிதியுதவியைப் பெற்று அழகிய ஆலயமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2004ம் ஆண்டு மகா கும்பாபிஷேகமானது வெகுவிமரிசையாக இடம்பெற்றது. தொடர்ந்து மண்டப கூரைகளிற்கு கொங்றீட் இடல், மண்டபங்களுக்கு மாபிள் பதித்தல், ஆலய முகப்பு அமைத்தல், சகடை வாகனம், அலங்கார விக்கிரகங்கள் அமைத்தல் எனப் பல திருப்பணிகள் இடம்பெற்றன.

வருடங்கள் 12 கடந்த காரணத்தினால் மீண்டும் எம்பெருமான் ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் நடாத்தப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு 2017ம் ஆண்டு ஆலயத்தில் பாலஸ்தாபனமும் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருப்பணி வேலைகள் விரைவுபடுத்தப்பட்டது. அவையாவன

1. ஆலய மூலஸ்தான கோபுரம் அகற்றப்பட்டு புதிதாக துவிதள கோபுரம் நிறுவியமை
2. அம்மன் சந்நிதானம் புதிதாக நிறுவியமை, அம்மன் சிலை புதிதாக ஸதாபிக்கப்பட்டது.
3. நடராஜர் சபை புதிதாக நிறுவி நடராஜர், சிவகாமி அம்மா, மாணிக்கவாசகர் சிலைகள் ஸ்தாபிக்கப்பட்டது.
4. சூரிய சந்திரருக்கு கோவில்கள் நிறுவியமை
5. அழகிய வசந்த மண்டபம் நிறுவியமை
6. புதிதாக யாகசாலை அமைக்கப்பட்டமை அதன் மேல் தளத்தில் கோபுரம் அமைக்கப்பட்டமை.
7. புதிதாக வாகனசாலை நிறுவப்பட்டமை
8. புதிதாக சண்டேசுவரருக்கு ஆலயம் அமைத்தமை
9. தீர்த்த கிணற்றிற்கு செல்லும் புதிய கதவு பொருத்தியமை
10. நவக்கிரக கோவிலுக்கு ஒன்பது புதிய சீமெந்திலாலான பொம்மைகள் நிறுவியமை
11. ஆலய வாசல், பிள்ளையார், முருகன் சந்நிதிகளுக்கு மாபிள் பதித்தமை
12. வைரவர், நகதம்பிரான் கோவில்களுக்கு மேற்புறம் கூரை பொருத்தியமை
13. பிரதோஷ தினத்தில் வீதியுலா வருவதற்கு இடப வாகனம், பிரதோஷமூர்த்திகள் என்பனவற்றை ஆலயத்திற்கு பெற்றுக் கொண்டமை
14. அழகிய கொடிஸ்தம்பம் நிறுவியமை
15. ஆலய முகப்புக் கோபுரத்திற்கு சீமெந்து பொம்மைகள் நிறுவியமை

இவ்வாறு செய்யப்பட்ட திருப்பணிகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. ஆலயம் புனருத்தாபரணம் செய்யப்பட்டு 24.03.2023ம் திகதி கும்பாபிஷேகமானது வெகுவிமரிசையாக இடம்பெற்ற வரையிலான காலப்பகுதியில் இவ்வாலயத்தின் ஒவ்வொரு திருப்பணிகளிலும் உதவி புரிந்தவர்களை நினைவுகூர்வது சாலப் பொருத்தமாக இருக்கும். எமது ஆலயமானது சுமார் 15 மில்லியன் ரூபாய் மதிப்பில் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. இப்பெருந்தொகையினை ஆலய புனரமைப்புப் பணிகளுக்கு வழங்கிய பெருமக்களை பெருமையுடன் நினைவு கூருகிறேன். மத வேறுபாடுகளைக் களைந்து இவ்வாலய வளர்ச்சிக்கு பங்காற்றிய அனைத்து அடியவர்களுக்கும் எல்லாம் வல்ல சதுர்வேதி மங்கள நாயகி சமேத சதுர்வேத மங்களநாதரின் சிவகடாட்சம் கிடைக்கப்பெற பிரார்த்திக்கிறேன்.

மேலும் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்புடைய பேராறு கிராம மக்களுக்கும் பேராறினை வதிவிடமாகக் கொண்ட தற்போது வெளிநாடுகளில் வாழ்கின்ற அன்பர்களும் ஆலயத்துடன் தொடர்புபட்ட அயற்கிராம மக்களும் இப்பெரும்பணி செய்ய அதிக பணத்தினைத் தந்து உதவியமையும் எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். ஆலயக் கட்டிடங்களை அழகிய முறையில் புதுப்பித்தும், புதிதாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்துதவிய சிற்ப சிரோண்மணி செ.சுதேஸ்கமார், சம்பூர் அவர்கள், அலங்கார விக்கிரகங்களை வனப்புடன் வடிவமைத்து தயாரித்து வழங்கிய திருகோணமலை சிற்பாச்சாரியார் ஸ்தபதி சிற்ப கலைமாமணி க. சிவசோதிலிங்கம், ஆலயத்தை வர்ணப் பூச்சினால் மிளிரச் செய்த ஆரையம்பதி மட்டக்களப்பைச் சேர்ந்த சிவனேஸ்வரா வர்ணக் கலைக்கூட உரிமையாளர் திரு.மு. கோபால் ராஜி அவர்களுக்கும் எமது சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சிறப்பாக இவ்வாலயத்திற்கு எப்போதும் தொண்டாற்றும் சிவனடியார்கள் கிடைக்கப்பெற்றது எமக்குக் கிடைத்த வரமாகும். அவர்கள் அனைவர்களுக்கும் இறைவன் அருளாட்சி என்றும் கிடைப்பதற்கு சபை சார்பில் பிரார்த்திக்கிறேன்.

சோழ வேந்தர்கள் மகா கும்பாபிஷேகங்களை யானைகளின் உதவியுடன் நடாத்தியதாக கூறப்படுகின்றது.. அவர்களது ஆட்சிக் காலத்தில் எமது ஆலயத்திலும் யானைகளை அவர்கள் பயன்படுத்தி கும்பாபிஷேகத்தினை நடாத்தியிருக்கலாம் என எண்ணுகின்றோம். வரலாறுகள் மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுவது போன்று இம்முறை எமது ஆலய கும்பாபிஷேகமானது பிரதான கும்பம் யானையில் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு மங்கள வாத்தியங்கள் முழங்க, சிவாச்சாரியர்கள் வேத புராணங்கள் ஓத, பக்தர்களின் அரோகரா கோசத்துடன் நவகுண்ட மகா கும்பாபிஷேகத்தினை சக்தி விபோதகர், சொற்பொழிவு வேந்தர், குருதிலகம் சிவஸ்ரீ. அமிர்தேஸ்வரக் குருக்கள் நடாத்தியமையும் இதனைத் தரிசிப்பதற்கு எமக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பமும் ஓர் தெய்வச் செயல் என்றே குறிப்பிட வேண்டும். அதற்கான உபயத்தை வழங்கிய உபயகாரர்களுக்கும் எம் பெருமானின் அருட்கடாட்சம் கிட்டுவதாக. 24 நாட்கள் இடம்பெறும் மண்டலாபிஷேகத்தின்போது தினமும் பக்த அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்று வருகின்றது. அன்னதானத்திற்கு அனுசரணை வழங்கும் பக்த அடியார்கள் அதனை ஒழுங்குபடுத்தி நேர்த்தியாக அன்னதானம் வழங்கும் சைவ இளைஞர்களும் பாரட்டுக்குரியவர்களே. என்னுடைய வயதிற்கு ஏற்கனவே இரண்டு கும்பாபிஷேகங்களை காணும் வாய்ப்பைப் பெற்றபோதிலும் இம்முறை கும்பாபிஷேகத்திற்காக ஆலயம், ஆலயச் சூழல் போன்றவை அழகாக அலங்கரிக்கப்பட்டு நாமும் எமது சமய நம்பிக்கைகளும், கலாசாரமும் இன்னும் விறுநடை போடுகிறது என்ற செய்தியை அனைவருக்கும் எடுத்துக் கூறுவதற்கு ஓர் நல்ல வாய்ப்பாக இக்கும்பாபிஷேகம் அமைந்துள்ளதென்றால் அது மிகையாகாது. ஆலய வீதிகள், நன்கு அலங்கரிக்கப்பட்டு பல இடங்களிலும் பாரிய கட் அவுட்டுகள் காட்சிப்படுத்தப்பட்டது. பார்ப்பவர்களை எல்லாம் பரவசப்படுத்தியிருக்கும் என எண்ணுகின்றேன். அம்முயற்சியில் தம்மை வருத்தி ஈடுபட்ட அனைத்து இளைஞர்களுக்கும் அதற்கு அனுசரணை வழங்கிய இறை நெஞ்சங்களுக்கும் எம்பெருமானின் அருட்கடாட்சம் கிட்டுவதாக.

இவ்வாறான வரலாற்றுச் சிறப்புமிக்க சிவாலயமானது, தற்போது மகோற்சவ ஆலயமாக பரிநாமமடைந்துள்ளமை நம் அனைவருக்கும் மகிழ்ச்சிக்குறியதொன்றே. எனவே எம்பெருமானின் ஆலயத்தை பக்தியுடன் வழிபட்டு அதனை சிறப்புடன் பேணி வருவோமாக.

அடியவன்
தேசமான்ய க.ரவிராஜன் J.P
தலைவர்
சிவாலயம்
கந்தளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் சிவன் கோவில்

சைவப் புலவர் பண்டிதர் R. வடிவேல்

கந்தளாய் என்ற ஊர் திருகோணமலைப் பட்டணத்திலிருந்து கொழும்பிற்கு செல்லும் நெடுஞ்சாலையில் முப்பத்தொன்பது கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கின்றது. ஈழத்தில் மிகப்பெரிய விவசாயப் பிரதேசங்களில் ஒன்றாகக் கந்தளாயும் கணிக்கப்பட்டு வருகின்றது. வரலாற்றுப் பிண்ணணிகள் பலவற்றைக் கொண்டுள்ள இவ்வூருக்கு கந்தளை, கந்தளாய் கண்தளை என்னும் திரிபுபட்ட வெவ்வேறு பெயர்களும் இருந்து வருகின்றன. காரணப் பெயர்கள் காலக்கிரமத்தில் திரிபுபட்டு வழங்கி வருகின்றன

சமீப காலக் குடியேற்றத் திட்டங்களினால் கந்தளாயின் பண்டைய வரலாறுகள் மறைக்கப்பட்டும் மறைபட்டுக் கொண்டும் வருகின்றன இப்படியான செயல்கள் இலங்கையில் வாழ்கின்ற தேசிய இனங்களுக்கிடையிலுள்ள சௌஜன்னிய உறவிற்கு ஊனமேற்படுத்துமென்பதை சான்றோர்கள் அறிவார்கள் கோணேஸ்வரத்திற்கு திருப்பணிகள் செய்து நிறைவேற்றிய குளக்கோட்டு மன்னன் விவசாயத்தை விருத்தி செய்து அதனால் கிடைக்கும் பிரயோசனங்களால் கோணேசர் கோயிலைப் பராமரிப்பதற்காக அல்லைக் குளம், வெண்டரசன் குளம் என்பனவற்றைக் கட்டி இரண்டாயிரத்து எழுநூறு ஆவணம் நெல்விதைக்கும் விதைப்புத் தரையை உண்டாக்கினான் இந்த நிலங்களில் விவசாயம் செய்வதற்காகவும் திருக்கோணேஸ்வரத்தின் தொழும்புகளைச் செய்வதற்காகவும் மருங்கூர் காரைக்கால் சிந்துநாடு என்னுமிடங்களிலிருந்து மக்களைக் கொண்டுவந்து குடியேற்றினான். குளக்கோட்டு மன்னனால் உண்டாக்கப்பட்ட விவசாயப் பூமிகளை நீர்ப்பாய்ச்சுவதற்கு அல்லைக் குளம், வெண்டரசன் குளங்களின் நீர் போதாமையினால் கந்தளாய்க்குளத்தைக் கட்டி மகாவலிகங்கையிலிருந்து வாய்க்கால் மூலம் நீரைத் தேக்கினான். இந்தக் குளத்தின் உதவியால் விரிவான அளவில் விவசாயம் நடைபெற்று வந்தது என்ற வரலாறுகள் கோணேசர் கல்வெட்டில் கூறப்படுகின்றது.

இற்றைக்கு 1500 வருடங்களிற்கு முன் குளக்கோட்டு மன்னனின் திட்டப்பிரகாரம் சைவத் தமிழ்மக்களின் குடியிருப்புக்களும், பிராமணக் குடியிருப்புக்களும் கந்தளாயில் இருந்து வந்தன. பேராசிரியர் செ.குணசிங்கமவர்களுடைய கல்வெட்டு ஆராய்ச்சிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. 1952ம் ஆண்டிற்குப் பின்னர் கந்தளாயிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் இலங்கை அரசாங்கம் குடியேற்றத்திட்டங்களை செயற்படுத்திய போது நிலத்தின் அடியில் கண்டெடுத்த பிள்ளையார் அம்பாள் மகாவிஷ்ணு முதலிய இந்துசமயத் திருவுருவங்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இந்தியாவில் சோழராட்சி மகோன்னத நிலையில் இருந்த காலத்தில் அவர்களுடைய செல்வாக்கு இலங்கையிலும் பரவியிருந்தது. பொலன்னறுவை, திருகோணமலை, கந்தளாய் , திருக்கரசை போன்ற இடங்களில் சோழப் பேரரசின் செல்வாக்கினால் சிவன் கோயில்கள் கட்டப்பட்டன. கி.பி. 1010ம் ஆண்டு இராசேந்திர சோழன் கந்தளாயில் சிவன் கோயிலைக் கட்டினான். மிகப்பெரிய சரித்திர வரலாற்றைக் கொண்ட இந்தச் சிவன் தமிழர்களின் வரலாற்றையும் சைவத்தின் பண்டையப் பெருமையையும் பிராமணக் குடியிருப்புக்களின் தொன்மையையும் நினைவுபடுத்துகின்றன. கந்தளாயில் போட்டங்காடு என்னுமிடத்திலுள்ள சிவன்கோவிலின் கருங்கற் சிதைவுகளும் திருவுருவங்களும் மண்ணில் புதைந்தும் புதையாமலும் காட்சியளிக்கின்றன. குடியேற்றத்திற்காக அரசாங்கத்தினால் காடுகள் அழிக்கப்பட்டபோது 1952ம் ஆண்டு இச்சிவன்கோயில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது கிடைத்த கருங்கற் திருவுருவங்களை அதன் அருமை தெரியாத தொழிலாளர்களும் விகாரபுத்தி படைத்த புத்திசாலிகளும் அழித்துச் சிதைத்து மறைத்துவிட்டார்கள். அந்தச் சிவன்கோவிலை அத்திவாரத்தோடு மறைக்க முடியாத காரணத்தினால் எஞ்சியுள்ள பின்னப்பட்ட இரண்டு சிவலிங்கங்களும் இரண்டு ஆவுடையாரும் சிவன் பார்வதி சிலைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைந்த பாகங்களும் பீடங்கள் பின்னமடைந்த நந்தி, கருங்கற்தூண்கள், படிக்கற்கள், நிலைகள், ஆசனக்கற்கள் என்பன இராசேந்திர சோழனால் கட்டப்பட்ட சிவன்கோவிலின் சிறப்பு வரலாற்றுக்கு எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன.

இங்கு கண்டெடுகப்பட்ட மூன்று கற்சாசனங்களில் இவ்வாலயத்தின் வரலாறுகளும் பதினோராம் நூற்றாண்டில் தமிழர்களின் அரசியல் செல்வாக்குகளும் விரிவாகவும் தெளிவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. நிசங்கமல்லன் கந்தளாயை தன்னாட்சிக்குள் கொண்டுவர பிரமானக் குடியேற்றம் தடையாயிருந்நது என்பதையும் சைவத் தமிழர்களின் செல்வாக்கு வலுப்பெற்றிருந்தது என்பதையும் அறியக்கூடியதாக உள்ளது. கந்தளாய் சிவன்கோவிலுக்குச் செல்லும் வீதியில் 1977ம் ஆண்டு கந்தளாய் பட்டிண சபையினரால் வடிகால் வெட்டும் போது ஒரு வெண்கலச் சிலையும் பூசை மணியும் கண்டெடுக்கப்பட்டது. அந்தச் சிலை நாயன்மார்களில் ஒருவருடைய சிலை என்று திரு.கனகதாமோதரம்பிள்ளை என்பவராலும் வேறு சில அன்பர்களாலும் அடையாளம் காணப்பட்டு தொல்பொருள் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சிலையும், மணியும் பண்டைச் சிவன்கோயிலின் சிறப்பை நினைவுபடுத்துகின்றன. இந்தக்கோவிலின் கிழக்குப் பக்கமாக 400 அடி தூரத்தில் தெப்பக்குளம் இருந்திருக்கலாமென ஊகிக்கலாம். ஆரம்பக்குடியேற்ற வாசிகளால் அந்த இடம் குளப்பள்ளம் என அழைக்கப்பட்டுவந்தது இந்தத் தகவலை வயோதிப முஸ்லீம் ஒருவர் கூறக்கேட்டேன். இந்தச் சிவன் கோயிலைச் சுற்றி சைவத் தமிழ்க்குடும்பங்களே சீவிக்கின்றன. இவர்கள் 1954ம் ஆண்டு இங்கு குடியேற்றப்பட்டபோது தங்கள் நிலங்களைப் பயன்படுத்தினார்கள். அவ்வேளை ஒரு செங்கற் பாதை காணப்பட்டதாகக் கூறினார்கள். அப்பாதை கோவிலின் தெற்கு மூலையில் இருந்து 200 அடி தூரத்தில் இருந்து ஆரம்பமாகி கிழக்குப்பக்கமாக கோவிலை நோக்கி அமைந்திருந்ததாம். தேரோடும் வீதியாக அது அமைந்திருக்கலாம். முன்பு வெண்கலச் சிலை கிடைத்த இடத்தில் 1954ம் - 50ம் ஆண்டு கால எல்லைக்குள் விநாயகரின் கற்சிலை கண்டெடுக்கப்பட்டு மறைக்கப்பட்டுவிட்டதாக அறிகின்றோம். கந்தளாய்க் காடுகளில் இருந்த பல கோயில்கள் அழிக்கப்பட்டதை நேரில் கண்டவர்கள் இன்றும் கூறுகின்றார்கள்.

இராசேந்திர சோழனால் கட்டப்பட்டு அழிந்து போன சிவன் கோவிலில் 1960ம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு 1975ம் ஆண்டு ஆனி மாதம் பத்தொன்பதாம் திகதி குடமுழுக்கு விழா நடைபெற்றது. கருவறையில் நிலத்தில் இருந்து வெளிப்பட்ட சிவலிங்கம் ஸதாபிக்கப்பட்டுள்ளது. மூன்று காலம் நித்திய பூசைகளும் கும்பாபிஷேக தினத்திற்கு அலங்காரப் பூசைகளும் விசேட காலப் பூசைகளும் நடைபெற்று வருகின்றன. ஊர்ப்பொதுமக்கள் பரிபாலனசபையமைத்து கோவிலைப் பராமரித்து வருகின்றார்கள். தமிழ்மக்கள் சென்று தரிசிக்க வேண்டிய இடமாக கந்தளாய் சிவன்கோவில் விளங்குகின்றது. இந்தக் கோவில் வரலாறுகளைத் தந்துதவிய திரு.கனகதாமோதரம்பிள்ளை அவர்களுக்கு என்றும் நன்றிக் கடப்பாடுடையேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் சோழர் கால சோழீஸ்வரம்

திரு. சிவஞானம் மகேந்திரராசா
ஓய்வு பெற்ற மாவட்டக் கலாச்சார உத்தியோகத்தர்
திருகோணமலை

கந்தளாய்ப் பிரதேசம் பரந்து விரிந்த விவசாய நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசமாகும். காடும் காடு சார்ந்ததும் மலையும்மலை சார்ந்ததும் கால்நடை, பயிர்வளம், குளம், வாய்க்கால்கள் முதலான எழில்கொண்ட வனப்பு மிக்க பிரதேசமாக காட்சியளிக்கின்றது.

இதன் வரலாறு மிகத் தொன்மை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசம் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அரசியல், ஆட்சிமாற்றம், காலநிலைமாற்றம், சமூகமாற்றம், வன்முறைகள் என்பனவற்றுக்கு முகம்கொடுத்து வந்துள்ளது. சோழமன்னர்களின் ஆட்சியில் மிகவும் உன்னதநிலைபெற்ற நகரமாகத் திகழ்ந்துள்ளது. சோழர் ஆட்சி பற்றி நோக்கினால் இராஜேந்திர சோழமன்னனின் 36ம் ஆட்சியாண்டில் இலங்கை முழுவதும் சோழர் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகின்றது. இலங்கையில் சோழர் ஆட்சி நிலவியதாக வரலாற்றுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

தமிழர் வரலாற்றிலேயே சோழர் காலம் பொற்காலமாகப் போற்றப்படுகின்றது. சோழ மன்னர்கள் சிறந்த நிர்வாகக் கட்டமைப்புக்களை, சமூகக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தி கலை, சமயம், இலக்கியம், வர்த்தகம், விவசாயம் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளித்துச் செயற்பட்டனர். இக்காலத்தில் சமய தத்துவங்களும் கோட்பாடுகளும் சமய, சமூக நிறுவனங்களின் வளர்ச்சியும் பெருவளர்ச்சி கண்ட காலமாகக் குறிபபிடலாம். சோழ மன்னர்கள் மனுநீதி தவறாது ஆட்சி செலுத்தினார்கள். மன்னர் இறைவனுக்கு ஒப்பானவராகவும் மன்னர் வாக்கு தேவ வாக்கு என மக்கள் மதித்துப் போற்றி வாழ்ந்தனர். சோழப் பேரரசின் சோழ மண்டலம் 9 பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஜெயம் கொண்ட சோழ மண்டலம் (தொண்டைநாடு) இராஜ இராஜ பாண்டி மண்டலம், மலை மண்டலம் (சேரநாடு) அதி ராஜ ராஜமண்டலம் (கொங்குதேசம்) முடி கொண்ட சோழ மண்டலம்(கங்கபாடி) நிகிரிலிச் சோழ மண்டலம் (நுகைம்பபாடி) வேங்கி மண்டலம் ஈழமான மும்முடிச் சோழ மண்டலம் என்பனவாகும்.

சோழ மன்னர்களின் பேராற்றல் மிக்க ஆளுமை உணர்வும் படைபலத்திறனும் தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி ஆட்சி புரிய உதவியது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சோழர் ஆட்சி நிலவியது. வாணிபத்திலும் தமிழக வாணிப குழுக்கள் கடல் கடந்த நாடுகளுக்கும் சென்று பெரு முதல் ஈட்டினார்கள். அது மாத்திரம் இன்றி தாங்கள் சென்ற இடமெல்லாம் பண்பாடுகளை பரப்பி நிலைக்கச் செய்தனர். சோழ மன்னர்கள் ஆலயங்கள் அமைப்பதில் மிக முக்கிய கவனம் செலுத்தினார்கள். ஆலயங்களை நிர்மாணிப்பதில் வள்ளல்களும், வாணிபர்களும் மக்களுக்கு உதவி புரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பல்லவர் கட்டடக் கலை வளர்ச்சியிலும் பார்க்க சோழர் காலக் கட்டடக் கலை பெரு வளர்ச்சி கண்டது. சிற்ப சாஸ்திர ஆகம விதிக்கமைந்த சிறிய, பெரிய ஆலயங்கள் அமைக்கப்பட்டன. கோபுரங்கள், தூபிகள், விமானங்கள் கொண்டதான பிரமாண்டமான ஆலயங்கள் கற்றளி முறையில் அமைக்கப்பட்டன. ஆலயத்தில் புராதன இதிகாச வரலாறுகளைச் சித்தரிக்கும் ஓவியங்கள், சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கலை வனப்பூட்டும் சித்திர வேலைப்பாடுடைய மண்டபங்கள் அமைக்கப்பட்டன.

ஆலயங்கள் வெறும் வழிபாட்டிற்காக மாத்திரம் அன்றி கல்வி, கலை , வைத்தியம் போன்ற பல்வேறு சமூக நலன் மேம்பாட்டுப் பணிகளும் ஆலயத்தை மையமாக வைத்தே நிறைவேற்றப்பட்டது. சோழர் காலத்திலே படிமக்கலை சிற்பக்கலை, ஓவியங்கள், நாடகங்கள், கூத்துக்கள்,இசை முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைகள் உன்னத நிலையை அடைந்தது என்றால் மிகையாகாது.

ஜம்புகேஸ்வரம் போன்ற இடங்களில் ஏழு நிலைக்கோபுரம் கொண்ட கோவில்கள் அமைக்கப்பட்டன. தஞ்சைப் பெருவுடையார் கோவில், கங்கை கொண்ட சோழேஸ்வரம், இராஜஇராஜேஸ்வரம் போன்ற ஆலயங்கள் பிரமாண்டமான ஆலயங்களாக நிர்மாணிக்கப்பட்டன. தேவார திருப்பதிகங்கள் நம்பியாண்டார் நம்பியினால் தொகுக்கப்பட்டன. நாரத முனிவரால் ஆழ்வார்கள் பிரபந்தங்கள் திவ்விய பிரபந்தங்களாக தொகுக்கப்பட்டன. ஆலயங்களில் தேவாரப் பாடல்கள் பண்ணோடு ஓதப்பட்டன. மேலும் சமய இலக்கிய நூல்கள் பல தோன்றின. சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி, சூடாமணி போன்ற காப்பிய நூல்களும் நல்லூர், வீரசோழியம் போன்ற இலக்கண நூல்கள் திருவந்தாதிகள் புராணங்கள் போன்ற சமய இலக்கிய நூல்கள் எழுதப்பட்டன.
சோழ மன்னர்கள் சைவ சமயத்திற்கு மாத்திரமின்றி வைணவம், சமணம், பௌத்தம் போன்ற மதங்களின் மேம்பாட்டிற்கும் உதவி சமய ஒற்றுமை ஏற்படுத்தினார்கள். இவ்வாறு சோழர் காலம் திகழ்ந்துள்ளது. இராஜ இராஜ சோழ மன்னன் தனது 8ம் நூற்றாண்டில் (981-1917) இலங்கையில் ஆட்சி புரிந்த மகிந்தனை வெற்றிபெற்று இராஜரட்டையைக் கைப்பெற்றி தனது சோழப்பேரரச மண்டல ஆட்சியின் கீழ் கொண்டு வந்ததாக கூறப்படுகின்றது. இதனால் ஈழநாடு மும்முடி சோழ மண்டலம் எனப் பெயர் பெற்றது. இது வரைக்கும் தலைநகராக இருந்துவந்த அநுராதபுரம் இக்காலப் பகுதியில் பொலனறுவைக்கு மாற்றப்பட்டது எனவும் மன்னனின் விருதுப் பெயர்களில் ஒன்றான ஜனநாத மங்கலம் என்ற பெயர் இந்நகருக்கு சூட்டப்பட்டதாகவும் வரலாறு கூறுகின்றது. சோழ மன்னனால் ஜனநாதமங்கலம் எனப் பெயர்பெற்ற பொலனறுவை நகரில் 10 சிவாலயங்களும், 5 விஷ்ணு ஆலயங்களும், ஒரு காளிகோவிலும் அமைக்கப்பட்டதாகவும் இதில் பிரதான சிவாலயமான வானவன் மாதேவி ஈஸ்வரம் என்ற விசாலமான ஆலயம் முதலாம் இராஜ இராஜ சோழ மன்னனின் பட்டத்தரசியான வானவன் மாதேவியின் பெயரால் அமைக்கப்பட்டதாவும் கூறப்படுகின்றது.

மேலும் சோழராட்சியில் கந்தளாய், பதவியா, திருக்கரசைமாநகரம் போன்ற இடங்களில் சிவாலயங்கள் அமைக்கப்பட்டு சிறப்பு மிக்க நகரங்களாகவும் பிரசித்தி பெற்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் இந்நகரங்கள் இருந்துள்ளன என்பதை வரலாற்றுச் சான்றிதழ் உறுதிப்படுத்துவதோடு கந்தளாய், பதவியா, திருகோணமலை ஆகிய நகரங்களை உள்ளடக்கியதாக முக்கோண ஆட்சி சோழர் காலத்தில் இடம்பெற்றதாக சொல்லப்படுகின்றது. கந்தளாய் நகர் சம்பந்தமான சில விடயங்களை நோக்கும் போது கந்தளாய்க் கல்வெட்டு மானாங்கேணிக் கல்வெட்டு என்பன திருகோணமலையில் சோழ இலங்கேஸ்வரனால் பலதுறைகளைச் செப்பனிட்டு கந்தளாய் நகரில் நடைமுறைப்படுத்திய நிர்வாகங்கள் மற்றும் நீர்ப்பாசனப் பணிகள் போன்றவை பற்றியும் விளக்குகின்றன. கந்தளாய்க் கல்வெட்டை ஆராய்ந்த பெராசிரியர் இச்சாசனத்தில் முதற்பகுதி வாசிக்கக்கூடியதாகவும் இரண்டாம் பகுதியில் பல எழுத்துக்கள் சிதைந்து காணப்படுவதாகவும் குறிப்பிடுகின்றார். கல்வெட்டின் முதற்பகுதி "ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ஸ்ரீ சங்கவர்மரான உடையார் ஸ்ரீ இலங்கேஸ்வர தெவற்கு யாண்டு 10 வது ராஜேந்திர சோழவள நாட்டு ராஜ விச் சாதர வளநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீ ராஜ ராஜ சதுர்வேதி மங்களத்து பெருங்குறி பெருமக்களோம் இய்யாட்டை கும்ப நாயுற்று பூர்வ பட்சத்து துவாதசியும் செவ்வாய்க்கிழமையும் பெற்ற ஆயிலத்து நாளஎன்றிறவு நம்மூர் தண்டுகின்ற முத்தங்கை கோயில் மானி" என்ற வாசகங்கள் காணப்படுகின்றன.

கந்தளாய் சதுர்வேதி மங்களத்து பெருங்குடிப் பெருமக்கள் சோழ இலங்கேஸ்வரனது 10ம் ஆட்சி ஆண்டிலே மாசி மாதம் பூர்வ பட்சத்து துவாதசியான செவ்வாய்க்கிழமை ஆயிலியம் நட்சத்திரம் கூடிவரும் தினத்தன்று கந்தளாய் சிவன் ஆலயத்தில் கந்தளாய்க் குளத்து நீரை பயிர்ச்செய்கைக்கு திறந்து விடுதல் பற்றிதான தீர்மானங்களை எடுத்துள்ளனர் என்ற செய்தி கல்வெட்டிலே தெரிவிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர்கள் பிராமணர்களுக்கு நில நன்கொடைகளை வழங்கி பிராமணக் குடியிருப்புக்களை ஏற்படுத்தினார்கள். பிராமணக் குடியிருப்புக்களே சதுர்வேத மங்களம் என அழைக்கப்பட்டது. சதுர்வேத மங்களத்தின் நான்மறையும் கற்றுணர்ந்த பிராமணர்கள் ஆலயங்களில் கிரியைகள், பிரார்த்தனைகள், புராணப் படலம் செய்ததோடு சமய தாபனங்களிலும், மடங்களிலும், சமயநெறிகளைப் போதித்தார்கள். வேதங்களைப் பயிற்றுவித்தார்கள் இதனால் இந்து சமயம் வளர்ச்சி பெற்றது.

சதுர்வேத மங்களம் கூடுதலான அதிகாரங்கைக் கொண்டிருந்ததாக கூறப்படுகின்றது கல்வெட்டில் பொறிக்கப்பட்ட "சதுர்வேதி மங்களத்து பெருங்குடிப் பெருமக்களே" என்ற வாசகத்தை நோக்கும் போது சோழர் காலத்தில் சபை அல்லது மகா சபை என்று அழைக்கப்படுவது சதுர்வேதி மங்களத்தின் உள்ளூராட்சி அமைப்பேயாகும். கந்தளாய் நகரில் சதுர்வேதி மங்களத்தின் உள்ளூராட்சி நிர்வாகத்தைக் கொண்ட மகா சபை ஒன்று இருந்துள்ளதை கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

இச்சதுர்வேதி மங்களம் இராஜ இராஜ சதுர்வேதி மங்களம் என அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இற்றைக்கு 1600 வருடங்களுக்கு மேல் குளக்கோட்டு மன்னன் அல்லைக் குளம், வெண்டரசன் குளம் ஆகியவற்றில் உள்ள நீர் விவசாய அபிவிருத்திக்குப் போதாமையினால் கந்தளாய்க் குளத்தைக் கட்டினான் எனவும் மகாவலி கங்கையில் இருந்து நீரை வாய்க்கால் மூலம் கொண்டு வந்து கந்தளாய்க் குளத்தில் தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்தியதாகவும் இந்நகரத்தில் விவசாய உற்பத்தியை செய்வதற்காகவும் திருக்கோணேஸ்வர ஆலய கோவிற் கிரியைகள் பூசைகள் விழாக்கள் என்பன சிறப்பாக நடந்தேறுவதாகவும் மருங்கூர், காரைக்கால் , சிந்து நாடு ஆகிய இடங்களில் இருந்து மக்களைக் கொண்டு வந்து இங்கு குடியேற்றியதாகவும் கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடுவதாக கூறப்படுகின்றது.சோழராட்சி தமிழ்நாட்டில் காணப்பட்டது போல் நிர்வாகக் கட்டமைப்பு ஆட்சிமுறை இங்கும் காணப்படுகின்றது. ஊர், நாடு,நகரம் என உள்ளூராட்சி நிர்வாக முறைகள் அமைக்கப்பட்டிருந்தன நில உடமை வரி விவசாயக் குத்தகை வரி குடிமனை பாதுகாப்பு வரி என்பன அறவிடப்பட்டுள்ளனஇவ்வாறான ஒழுங்கமைப்பில் கந்தளாய் நகராட்சியும் அமைந்துள்ளன

கந்தளாய் சிவாலயம் பற்றிய தகவல்களில் இவ்வாலயம் மிகவும் பிரசித்தமான ஆலயமாகவும் பலர் ஒன்றுகூடி அமர்ந்து கலந்துரையாடக்கூடிய மண்டபங்கள் கொண்ட ஆலயமாகவும் இருந்திருக்கின்றது. பிராமணர்கள் செறிந்து வாழ்ந்த இவ்வாலயச் சூழல் மிகவும் புனிதமாகவும் தேவார பாராயணங்களோடு ஆகம விதிக்கமைவான பூசைகள், கிரியைகள் ,விழாக்கள் என்பன கிரமமாக நடந்தேறி வந்த தலமாகவும் திகழ்ந்துள்ளது. இவ்வாலயச் சிறப்பிற்கு இன்னும் ஆதார ஆவணங்களாக அழியாச் சின்னங்களாக இங்கு காணப்படும் கற்சாசனங்கள், கல்தூண்கள், ஆவுடையார், நந்தி உருவங்கள், சிவன் பார்வதி உருவங்கள் மற்றும் பொருட்கள் சான்று பகிர்வனவாக உள்ளன.

புராதன வரலாற்றுப் பெருமை மிக்க சிவாலயம் புனர் நிர்மானம் பெற்று புதுப் பொலிவுடன் திகழ்வது சைவ உலகிற்கு பெரும் ஈடேற்றத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. குடமுழுக்குக் காணும் கந்தளாய் சோழீஸ்வரப் பெருமானின் அருட்கடாட்சத்தை உலகெல்லாம் வாழும் இந்து மக்கள் உணர்ந்துய்ய எம்பெருமான் அருள் புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

அன்பே சிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கிடைத்த தமிழ் சாசனத்தில் முதன்முதலான திருப்பள்ளியெழுச்சியென்ற சொல்

பேராசிரியர் சி.பத்மநாதன்
(பல்கலைக்கழகம், பேராதனை)

கந்தளாயிலே, பேராறு கொலணியில் ஒரு சிவாலயம் அமைந்திருக்கின்றது. அது சீமேந்துக் கட்டடமாக புனரமைக்கப்பட்டுள்ளது. முன்பு அது ஒரு குடிசையாகக் காணப்பட்டது. அதனருகே ஒரு மரத்தின் அடியில் ஆயிரம் வருடங்களிற்கு முன்னிருந்த சிவன் கோயில் அழிபாடுகள் சில உள்ளன. மூன்று சிலாசாசனங்களும் அங்குள்ளன. அவற்றிலொன்று முதலாம் விஜயபாகு தேவரின் 42ம் ஆண்டிலே (கி.பி.1097) எழுதப்பெற்றது. அது ஓரளவு நீளமானது. நாகைச்சாணி எனும் பிராமணப் பெண் தனது கணவனின் நினைவாக கந்தளாய் விஜயராஜ சதுர்வேதி மங்களத்து விஜயராஜஈஸ்வரம் எனும் ஆலயத்தில் ஏற்படுததிய அறக்கட்டளை பற்றிய விவரங்களை அது வர்ணிக்கின்றது. அதனைச் சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு கலாநிதி.சே.பரணவிதான முழுமையாக வாசித்து வெளியிட்டார்.

அங்குள்ள இரண்டாவது சாசனம் இலங்கையில் அரசனான முடிசூடியிருந்த சோழனாகிய சோழ இலங்கேஸ்வரன் காலத்து அவனது பத்தாம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டது. அது கந்தளாயினை ( ஈழமான மும்முடி சோழ மண்டலத்து) இராஜேந்திர வளநாட்டு விச்சாதிர வளநாட்டு ராஜராஜ சதுர்வேதி மங்களம் என வர்ணிக்கின்றது. மிகுந்த வரலாற்று முக்கியத்துவமுடைய இந்தச் சாசனம் வயல் வெளியொன்றிலே காணப்பட்டது. சாம்பல் தீவு கிராமசபைத் தலைவராக இருந்த அமரர் செ. தம்பிராசாவின் முயற்சியால் அது இப்போது காணப்படும் இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. தம்பிராசாவின் அனுசரனையுடன் கலாநிதிகள் கா.இந்திரபாலா,செ.குணசிங்கம் ஆகியோர் சாசனத்தைப் படிவமெடுத்து பின்னர் அதனை இயன்றவரையில் வாசித்து தனித்தனியாக வெளியிட்டனர். சாசனத்தில் ஒரு பகுதியில் எழுத்துக்கள் பல சிதைவாகியுள்ளன. எழுதப்பட்ட கல்லும் இருபகுதிகளாக துண்டமாகியுள்ளது.

இம்மாதம் 8ம் திகதி உலக இந்துமாநாடு தொடர்பாக திருகோணமலைக்குப் போயிருந்த வேளையில் வட – கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு.தியாகலிங்கம் செய்த ஏற்பாடுகளின் பயனாக ஆய்வு முயற்சியின் ஓரம்சமாக கந்தளாய் சிவன் கோயில், தம்பலகாமம் ஆதி கோணைநாதர் கோயில் ஆகிய தலங்களிற்குச் சென்று அவற்றை எம்மால் பார்க்க முடிந்தது.
கந்தளாயில் ஒரு புதிய சாசனம் இருப்பதாக இரு வருடங்களுக்கு முன்னர் இரத்னாயக்கா என்ற சுகாதார உத்தியோகத்தர் எமக்கு அறிவித்தார் அவர் பல்கலைக்கழக வளாகத்தில் எமது வேண்டுகோளுக்கு இணங்க கந்தளாய் சிவன்கோயிலுக்குப் போய் அங்குள்ள தொல்பொருள் சின்னங்களைப் பார்வையிட்டு ஒரு விவரமான அறிக்கையினை எழுதி எமக்கு வழங்கியிருந்தார் அங்கு இருவருமாகச் சென்று தொல்பொருள் சின்னங்களை ஆராய்வதென்று தீர்மானித்த போதும் பிரயாணத்தை மேற்கொள்ள முடியவில்லை சில தினங்களுக்கு முன்பு கந்தளாயிலுள்ள புதிய சாசனத்தைப் பற்றிக் கலாநிதி .ப. புஷ்பரட்ணம் தொலைபேசி மூலம் எமக்குத் தெரிவித்திருந்தார் சாசனத்தின் சில பகுதிகள் தெளிவற்று இருப்பதாகவும் வேறு சில பகுதிகள் சிதைவுற்று உள்ளதாகவும் அவர் கூறினார். விஜயராஜ சதுர்வேதி மங்களம் பற்றி அதில் சொல்லப்படுகின்றது என்பதை அவரால் அறிந்து கொள்ள முடிந்தது.

ஒன்பதாம் திகதி மாலை நாம் கந்தளாயிலுள்ள பேராறு கொலணியை அடைந்தோம்.மாகாண சபையைச் சேர்ந்த புகைப்படப் பிடிப்பாளரும் வேறு ஒருவரும் எம்முடன் வந்திருந்தனர்.கோயில் வளாகத்தினுள் நுழைவதற்கு முன்பு அதன் அருகிலுள்ள கந்தளாய் தமிழ் மகா வித்தியாலயத்து அதிபர் திருமதி .எல். ரவிராஜனோடு தொடர்பு கொண்டு எமது பணிக்கு வேண்டிய உதவிகளையும் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டோம். அவரது மாணவர் இருவர் எம்மோடு கூடிவந்து சில ஆதரவுகள் புரிந்தனர். முன் சாசனவியலாளரும் பிறர் எவராலும் வாசிக்கப்படாத சாசனம் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு முன்னர் கோயில் வளாகத்தின் முன்புறத்து மூலையிலே நிலத்தை வெட்டிய போது காணப்பெற்றதாகச் சொல்லப்படுகின்றது. அதனைப் பற்றி தம்பிராசா அறிந்திருக்க வில்லை. எனவே 1970ம் ஆண்டளவில் கா.இந்திரபாலா செ.குணசிங்கம ஆகியோர் கந்தளாய்க்குச் சென்றிருந்த போது இச்சாசனம் நிலத்தின் கீழ் புதைந்து கிடந்தது என்று அனுமானித்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட சாசனம் 5 அடி நீளமும்2 அடி அகலமும் கொண்ட கற்பலகையொன்றிலே எழுதப்பட்டுள்ளது. கல்லின் ஒரு பகுதியில் மட்டும் எழுத்துக்கள் அமைந்துள்ளன. அதனைப் பார்த்தவுடன் அதில் நீரை ஊற்றி சுத்தம் செய்யுமாறு அனுசரனையாக வந்தவர்களை வேண்டினோம்.கல்லினைக் கழுவிய பின்பு பொச்சு மட்டையை இரண்டாக வெட்டி அத்தும்புகளாலே கல் நன்றாகச் சுத்தம் செய்யப்பட்டது. அதனை மீண்டும் நீரால் கழுவியபோது கல்லிலே காலாகாலாமாகப் படிந்திருந்த அழுக்குகள் மற்றும் அடைசல்களும் பெரும்பாலும் நீங்கிவிட்டன. சீலைத் துணியினால் கல்லினை நன்றாகத் துடைத்த பின்பு அதன் மேல் கோதுமை மா தூவிப் பரப்பப்பட்டது. அதன் பயனாக கல்லில் எழுதப்பட்ட வாசகம் தெளிவாகத் தெரிந்தது. எம்மோடு கூடி நின்றவர்கள் அதனைக் கண்டு வியப்புற்றனர். எழுத்துக்கள் யாவும் தெளிவாகத் தெரிந்தன. படிவம் எடுக்காது கல்லிலுள்ள படி சாசனத்தை சிரமமின்றி வாசித்தோம். அதன் வாசகம் கீழ் வருமாறுள்ளது.

01. ஸ்வஸ்தி ஶ்ரீ கோ அபய
02. சலாமெக பாம்மரான சக்ர
03. பத்தி ஶ்ரீ ஜயபாகு தேவற்கு யா
04. ஆண்டு 35 ஆவது கந்தயாயன விஜ
05. யராஜ சதுர்வேத மங்கரத்து ஶ்ரீ கை
06. லசமான விஜயராஜேஸ்வர முட
07. யார்க்குத் திருப்பள்ளியெழுச்சி மத்ய
08. போநகம் அமுதுக்கு காசு இட்டார் பத்து

இந்தச் சாசனம் ஜயபாகு மன்னனைக் குறிப்பிடுகின்றது. அது அவனை கோ என்றும் சக்ரவர்த்திஎனவும் வர்ணிக்கின்றது.

முதலாம் விஜயபாகு (1055-1110) இறந்த பின் அவனது தம்பியாகிய ஜயபாகுவை பொலநறுவையில் அரசனாக முடிசூட்டினார்கள் ஆயினும் அவனால் அவனது பதவியைப் பேணிக்கொள்ள முடியவில்லை. முன்னய அரசனின் மகனான விக்கிரமபாகு (1111-1132) அவனைத் துரத்தி விட்டு இராசதானியில் அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டான். அவனுக்குப் பின் அவனது மகனாகிய கஜபாகு (1132-1153) 21 வருடங்கள் அதிகாரஞ் செலுத்தினான். அவனும், தகப்பனும் மன்னராகி முடிசூடிக் கொள்ளவில்லை. எனவே அவர்களது ஆட்சிக்காலமாகிய 43 ஆண்டுகளிலும் எழுதப்பட்ட சாசனங்கள் யாவும் ஜெயபாகுதேவரின் ஆட்சியாண்டுகளைக் குறித்து எழுதப்பட்டன. ஜெயபாகு தேவர் சில மாதங்களுக்கு மட்டுமே அரச பதவியில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜெயபாகு தேவரின் 35ம் ஆண்டு கி.பி 1145-46 க்குச் சமமானது. அது கஜபாகுவின் ஆட்சிக்காலமேயாகும். எனவே சாசனம் கஜபாகு அதிகாரம் பெற்று 12-13 ஆண்டுகள் கழிந்த பின் எழுதப்பட்டுள்ளது. அவன் தனது ஆட்சியின் முடிவிலே கந்தளாயில் அரண்மனையமைத்து அதில் வாழ்ந்தானென்று மகாவம்சம் கூறும். சைவசமயச் சார்புடையவனாகிய கஜபாகு கந்தளாய் பிரம்மதேயத்திற்கும் திருக்கோணேஸ்வரத்திற்கும் பல வழிகளில் அதரவு புரிந்துள்ளான். கந்தளாய் பிரம்மதேயம் அதிலிருந்த தென் கைலாசமான சிவன் கோவில் என்பன பற்றிய விவரங்கள் இச் சாசனத்தில் உள்ளன. இலங்கையில் இதுவரை கிடைத்த தமிழ்ச்சாசனங்களில் திருப்பள்ளியெழுச்சி, திருப்போனகம் என்ற சொற்கள் இதிலே தான் முதன்முதலாக வருகின்றன.

கந்தளாய்க் குளத்தின் அணைக்கட்டிலே தமிழில் எழுதப்பட்ட சிலாசாசனம் இருப்பதாக அதனைக் கண்டவர்கள் சொல்லக் கேட்டுள்ளோம் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாயில் கண்டுபிடிக்கப்பட்ட அரிய தமிழ்க் கல்வெட்டு

கலாநிதி ப.புஷ்பரட்ணம்
பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப் பல்கழைக்கழக வரலாற்றுத் தறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பஷபரட்ணம் அவர்களின் தலைமையில் சென்ற டாக்டர் தருமராஜா, திரு.மயுரன், திரு.வேலவன், திரு.ரவீந்திரகுமார், குழுவினர் திருக்கோணமலையின் எல்லைக் கிராமம் எனக்கூறப்படும் கந்தளாய் பேராற்றிற்கு அருகிலுள்ள புராதன சிவன் ஆலய அழிபாடுகளுடைய இற்றைக்கு 1100 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்க்கல்வெட்டொன்றினைக் கண்டுபிடித்தனர். 5 அடி நீளமும் 2 அடி அகலமும் கொண்ட இக்கல்வெட்டு தற்போது உடைந்த நிலையில் காணப்பட்டாலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பகுதி மழுமையாகவும் தெளிவாகவும் உள்ளது.

எட்டு வரிகளைக் கொண்ட இக்கல்வெட்டு தமிழ் மற்றும் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன இக்கல்வெட்டினை வாசித்த கலாநிதி புஷ்பரட்ணம் அது பற்றிக் கருத்துக் கூறுகையில் கல்வெட்டில் பொறிக்கப்பட்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இக்கல்வெட்டு கிபி 12ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது கி.பி.1103ம் ஆண்டு பொறிக்கப்பட்டது. என்பதையும் அக்காலத்திலேயே இவ்விடம் கந்தளாய் என்ற பெயரால் அழைக்கப்பட்தையும் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது என்றார். அத்துடன் சோழர் காலத்தில் இவ்விடத்திலிருந்த சதுர்வெதிமங்களம் என்ற பிராமணரது கடியிருப்புக்கள் பிற்காலத்திலும் தொடர்ந்து இருந்ததையும் அங்கிருந்த சதுர்வேத மங்கலத்திற்கு பொலநறுவையில் ஆட்சிபுரிந்த விஜயபாகு தனது 37 ஆட்சியாண்டில் தானமளித்தான் என்பதையும் இக்கல்வெட்டு மேலும் கூறிச் செல்வது இக்கல்வெட்டின் மூலம் தெரியவருகின்றது.

இன்னொரு வரலாற்று உண்மை ஈழத்தில் சோழரது 77 ஆண்டு ஆட்சி மறைந்ததன் பின்னரும் பொலநறுவையில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்கள் தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் தமது அரசியல் வர்த்தக பண்பாட்டுத் தொடர்புகளை தமிழில் மேற்கொண்டார்கள் என்பதற்கு மேலும் இக்கல்வெட்டு ஒரு முக்கிய சான்றாக அமைகின்றது. இவ்வட்டாரத்திலிருந்து 1930 இலும் 1972 இலும் இரு தமிழ்க்கல் வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் புராதன சிவாலயம் இருந்ததற்கான கட்டட சிற்ப இடிபாடுகளும் விக்ரகங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இச்சிவாலயம் ஈழத்தில் இருந்த புராதன ஆலயமாக இருந்திருக்கலாம் என்பதை அண்மையில் இவ்வாலய அழிபாடுகளுக்குத் தொடர்ச்சியாகவுள்ள அக்ரபோதி மகா வித்தியாலயம் அமைந்துள்ள காணியில் நீர்த்தொட்டி அமைப்பதற்காக நிலத்தை அகழ்ந்த போது வெளிவந்த செப்புத் திருமேனிகளும் விக்கிரகங்களும் ஆலயத் தூண்களும் சான்று பகிர்கின்றன. அவற்றுள் அவ்விடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரு தமிழ்க்கல்வெட்டுக்கள் இப்பொழுது உடைக்கப்பட்ட நிலையிலும் ஏனைய தொன்மைச் சான்றுகள் கவனிப்பார் அற்ற நிலையிலும் அவை வீதியோரங்களிலும் பற்றைக் காடுகளுக்கு மத்தியிலும் சீரழிந்து கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

இவை தமிழர் தொடர்பான தொல்லியற் சான்றுகளுக்கு இந்நாட்டில் எத்தகைய மதிப்பு கொடுக்கப்பட்டு வருகின்றதென்பதையும் அவதானிக்க முடிகின்றது. என்பதைக் கலாநிதி புஷ்பரட்ணம் வேதனையோடு தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கையில் சீரழிந்து கொண்டிருக்கும் தமிழரின் தொன்மைச் சான்றுகள்

கலாநிதி.ப. புஷ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஒரு இனத்தின் தொன்மையான, தொடர்ச்சியான வரலாற்றையும் பண்பாட்டுத் தனித்துவத்தையும் அடையாளப்படுத்துவதில் அந்த இனம் சார்ந்த மக்களது மூதாதையினர் காலத்திற்குக் காலம் எம்மிடையே விட்டுச் சென்ற தொல்பொருட்சின்னங்களுக்கு முக்கிய பங்குண்டென்பதில் ஐயமில்லை. இதனால் தான் தொல்பொருட்கள் அம்மக்களது தேசிய இனத்தின் அடையாளச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன.

மொழியடிப்படையில் சிங்கள மொழி பேசிய மக்களுக்கு முன்பிருந்த ஈழத்தில் தமிழ் மொழி பேசிய மக்கள் வாழ்ந்து வருகின்றனர். என்ற உண்மை அண்மைக் கால தொல்பொருட் கண்டுபிடிப்புக்களால் உறுதியாக தெரியவந்துள்ளது. இதற்கு தென்னிலங்கையில் அங்குறுகொட, அநுராதபுரம் வட இலங்கையில் பூநகரி, கந்தரோடை, ஆனைக்கோட்டை, உடுத்துறை போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்துப் பொறிப்புடன் கூடிய தொல்பொருட்சின்னங்கள் சிறந்த எடுத்துக் காட்டாகும். ஆயினும் இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஈழத்தமிழரது வரலாற்றை முழுமையாகக் கூற முடியும் எனப் பெருமைப்பட வாய்ப்பில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

இதற்கு அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசியல் சக்திகள் யாவும் தாம் விரும்பும் பௌத்த,சிங்கள தேசிய வாதத்தை கட்டியெழுப்பும் நோக்கில் தொல்லியல் ஆய்வுகளை நெறிப்படுத்திச் சென்றதே முக்கிய காரணமாகும். இதனால் ஒப்பீட்டளவில் தமிழரது பண்டைய வரலாற்றை முழுமையாக அறியக்கூடிய தொன்மைச் சான்றுகளை கண்டுபிடிக்க வாய்ப்பில்லாது போய்விட்டன. அதேவேளை எதிர்பாராமல் தமிழர் தொடர்பாகக் கிடைத்த தொல்லியங் சான்றுகள் கூட அவர்களது வரலாற்று ஆய்விற்குப் பயன்படும் வகையில் சரிவரப் பாதுகாக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருப்பினும் தமிழ் மக்கள் ஏனைய இன மக்களைப் போல் தம் இனம் சார்ந்த தொன்மை வரலாற்றையும் பண்பாட்டுத் தனித்துவத்தை அறிந்து கொள்ளக்கூடிய கல்வியைப் பாடசாலை மட்டத்தில் இருந்து இதுவரை பெற்றுக் கொள்ள வாய்ப்பில்லாது போனமையும் ஓர் முக்கிய காரணமாகும். இதனால் தான் ஏனைய இனமக்கள் தம் மூதாதையினர் விட்டுச் சென்ற தொல்பொருட்களை தமது இனத்தின் வரலாற்றுப் பொக்கிசமாக பாதுகாக்கும் போது தமிழர்களின் பலரும் அவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றைப் பாதுகாக்கவில்லை என்ற குற்றச்சாட்டு தோன்றுவதற்குக் காரணம் எனலாம்.

ஆயினும் இக்கசப்பான குற்றச்சாட்டு இனிமேலும் தொடரக்கூடாது என்ற கருத்து முன்பொருபோதும் இல்லாத அளவிற்கு அண்மைக் காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் பலதரப்பட்ட பிரிவினரிடம் இருந்து ஒத்த குரலில் எழுப்பப்படுவதைக் காணலாம்.

இதனை ஊக்கப்படுத்தும் வகையில் ஈழத்தில் வெளிவரும் தமிழ்ப் பத்தரிகைகளும், பொதுசன அமைப்புக்களும், இந்து கலாசார அமைச்சரும், அமைச்சின் அதிகாரிகளும், கல்வி நிறுவனங்களும் செயற்பட முன்வந்திருப்பது மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகும். ஆயினும் இதன் நடைமுறை வெற்றி என்பது சாதாரண மக்களை ஜனரஞ்சகமான விளம்பரம் மூலம் விழிப்படையச் செய்வதில் மட்டுமின்றி அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடியவர்களின் அதிகாரச் செயற்பாட்டிலும் தங்கியுள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது.

இதற்கு ஒரு எடுத்துக் காட்டாக கிழக்கிலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் நீண்ட காலமாக திருகோணமலை மாவட்டத்தில் சீரழிந்து கொண்டிருக்கும் தமிழரின் தொன்மைச் சான்றுகளைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலும்.... குடிகளும்



ஈழ மணித்திருநாட்டில் எழில் கொஞ்சும் அழகிய கந்தளாய் நகரிலே குளமும், குடிகளும் புடைசூழப் பொலிவுடன் விளங்கிக்கொண்டிருப்பது நம் சோழீஸ்வரப்பெருமான் வீற்றிருக்கும் ஆலயம்.

சோழராட்சிக்காலத்தில் ஈழ நாட்டில் அமைக்கப்பட்ட ஆலயங்களுள் இன்றும் அழிவுபடாது, அருள்குறையாது அடியார்களின் அறியாமை இருளையும், அவர்கள் மன்றாடிக் கேட்பவையாவற்றையும் அன்போடு ஈடேற்றிக் கொண்டிருக்கிறது இவ்வாலயம்.

“சதுர் வேதி மங்களபுரம்” என்ற பெயரோடு இக்கந்தளாய் மண் நறுமணம் பரப்பக்காரணம் நம் சோழீஸ்வரப்பெருமானே!

வானளாவிய மணிக்கோபுரம் இல்லாவிடினும் நாமனைவரும் வானைப்பார்க்குமளவிற்கு உயர்ந்த கோபரமும், கலசமும் நம் மக்களின் குறைதீர்க்கும் அம்சமாய்க்காணப்படுவது ஆச்சரியமே!

கண்கள் இரண்டு என்றாலும் பார்வை பார்க்கப்படும் பொருள் ஒன்றே. அவ்வாறுதான் கோயில், பாடசாலை இரண்டும் வேறு வேறு என்றாலும் இங்கு பேணப்படுவது நம் குடிமக்களின் நலனோங்கும் நல்ல செயற்பாடுகளே.

சோழீஸ்வரச் சிவனாலயம், பரமேஸ்வரா வித்தியாலயம் இவை இரண்டும் ஆலயங்களன்றோ! இரட்டை மொழிகளாய் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாத வகையில் இணைந்து இன்றுவரை நம் கந்தளாயெனும் ஊரை உயிர்ப்புடன் உலவச்செய்கின்றன, என்பது நாம் அறிந்த உண்மையல்லவா.

நான் இந்த ஊரில் பிறந்நதைப் பாக்கியமாய்க் கருதுகின்றேன். இப்போது எம்பெருமான் சந்நிதியில் நாளும் நாளும் வந்து என்னால் இயன்றவரை தேவையறிந்து சேவை செய்யத் தூண்டியதும், பல இடர்களுக்கும், தடைகளுக்கும் இடையே பல ஆண்டுகளுக்குப்பின் பலருமே வியக்கும்படி, எங்கள் ஊரிலும் புதுமையும் சக்தியும் வாய்ந்த சிவன் உறையும் ஆலயத்தைப் புனரமைக்கும் பணியில் நானும் ஓர் அணிலாய் உதவியிருக்கிறேன், என்பதை உணரும் போது என்னுள்ளம் பூரிப்படைகின்றது.

“அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்ற ஔவையின் வாக்குப்போல எவர்க்கும் கிடைத்தற்கரிய மனிதப்பிறவி எடுத்த நாம் எம்மால் இயலுமான சேவைசெய்து பிறந்த பயனை அடையவேண்டும். இதன்வழியே எனது மொழி.

பலகாலம் காத்திருந்த நம் சிவனாலயம் இன்று சைவ அடியார்கள், இளைஞர்கள், வெளிநாட்டில் வசிக்கும் அன்பர்கள், நிதிசேகரித்தவர்கள் மற்றும் இவ்வாறு பலரது முயற்சிகளால் முழுமைகொண்டு நம் கண்முன் வியப்புடன் விளங்குவது நடுவூரில் நல்ல மரம் பழுத்தது போன்றது. மரத்தில் கனிகளையும் உடல்காக்கும் மூலிகைகளையும் பெற்று நலமடைதல் போல் நம் சிவாலயத்தையும் பக்தியோடு வணங்கவேண்டும், நாளும் வந்து தொண்டுகள் புரியவேண்டும்.

நம் சமூகம் ஆரோக்கியமான எதிர்காலம் காணவேண்டின் கோயிலும், கல்விச்சாலையும் இருகண்ணெனப் போற்ற வேண்டும். இதனூடாக நடத்தையில் மாற்றம் கண்டு மனிதநேயமுள்ள சமூகத்தை கட்டியெழுப்ப எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற இளைஞர்கள் முன்வரவேண்டும். இதுதான் நீங்கள் செய்ய வேண்டிய கைங்கரியமாகும் என எதிர்பார்க்கின்றேன்.

மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்.

நா. சுந்தரலிங்கம்
ஆலயப்பொருளாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல சௌபாக்கியம் அளிக்கும் பிரதோஷ வழிபாடு



"சிவாயநம" என்று சிந்திப்போர் அனைவரும் பிள்ளையார் சுழிக்கு அடுத்ததாக "சிவமயம்" என்று எழுதிவிட்டுத்தான் மற்ற விசயங்களை எழுதத் தொடங்குவர்கள். இந்த உலகம் முழுவதும் ஆனந்த பூர்வமாக சிவமே நிறைந்திருக்கிறது என்ற ஆழ்ந்த நம்பிக்கையின் அடையாளம் இது.

- ஈசனுடைய தலையே சுவர்க்கமாகும்.
- பரந்த ஆகாயமே அவருடைய தொப்புளாகும்.
- சூரியன், சந்திரன், அக்னி, மூன்றும் சிவபெமானின் மூன்று கண்களாகும்.
- திசைகள் அனைத்தும் சிவனது காதுகளாகும்.
- பாதாளமே அவருக்கு பூங்கமலப் பொற்பாதங்களாகும்.
- நட்சத்திரங்கள் அனைத்தும் அவர் அணியும் முத்துக்கள் கோர்த்த மணிமாலையாகும்.
- விண்ணில் வாழும் தேவர்கள் அனைவரும் ஈசனின் நெடுந்தோல்களாகும்.
- மென்மையான நுரைகளுடன் கூடிய அலைகடல் அவர் அணியும் ஆடைகளாகும்.
- ஞானமே அவரது பிரகாசமாகும்.
- சப்த மேகங்கள் யாவும் அவருடைய ஜடாபாரங்களாகவும் ஆகின்றன.
- வாயுவே அவரது நாசியில் தவழும் மூச்சுக் காற்றாகும்.

இவ்வாறு ஈசனை வருணிக்கிறது லிங்கபுராணமாகும்.

"போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார்:
அவர்பின் புகுவேன்"

- அப்பர் பெருமான் -

சிவபெருமான் சமாதானப் பிரியராகும். அதுவும் அவரைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கும் கீதங்கள் என்றால்.....

வெள்ளியங்கிரியை அசைத்த இராவணன் சாமகானம் பாடித்தான் ஈசன் அருளைப் பெற்றார்.

**"இமயவரை ஈன்ற உமையொரு பாகனாய்த் திகழும்**
**விமலனே!**
**வெண்திரைக் கடலினின்று விசம் அருந்திப் பரிவாக**
**உம்பர் முதல் உலகோர் அனைவரையும் காத்த அன்பு**
**அண்ணலே!**
**சிவபெருமானே!**
**நின் சேவடிகள் பணிகின்றோம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதோஷம் என்றால் என்ன?

**பிரதோஷம் என்பது:**

இது வடமொழிச் சொல் "ப்ர" என்றால் மிகவும் அதிகமானது என்றும் தோசம் என்றால் தீமை என்றும் பொருள். அதுவும் மிகவும் அதிகமான தீமை தரும் வேளை என்பது பொருளாகும். அதாவது மிகவும் அதிகமான தீமை தரும் வேளை" எனலாம். இந்த நேரத்தில் தான் தீமை விலகி நன்மை பெருக உலக நலன் குறித்து சிவபெருமான் ஆலகால விசத்தைப் பருகினார். ஆகவேதான் அந்த நேரத்தில் சிவபெருமானை வழிபடுவது உசிதம் எனக் கூறப்படுகின்றது.

**பிரதோஷ காலத்தில் வழிபாடு செய்வதால் கிடைக்கும் நன்மைகள்**

பிரதோஷ உற்சவ தரிசனம்

- மூன்று திருக்குட முழுக்கு விழாவினை தரிசித்த பயனும்
- நூறு சிவத்தலங்களை ஒரே சமயத்தில் தரிசித்த பயனும் கிடைக்கும் என்பது ஆன்றோர் வாக்காகும்.

பிரதோஷ காலம் சிவபெருமானைத் தியானம் செய்வதற்கு உகந்த காலமாகும். பகலின் முடிவு சந்தியா காலத்தின் தொடக்கமாகும். உலகம் ஒடுங்குகின்றது. மனம் சிவனிடத்தில் ஒடுங்க அதுவே நல்ல நேரமாகும். பிரதோஷ காலத்தில் பரமேஸ்வரனைத் துதிப்பதென்பது ஆயிரம் அஸ்வமேய யாகம் புரிவதற்கு ஒப்பாகும். ஆகவே ஆரவார உலகில் அமைதி நிலவ, மன ஒருமைப்பாட்டுடன் மாண்புடன் திகழ உகந்த விரத நாளே பிரதோஷ தினமாகும்.

**பிரதோஷ காலம்**

பிரதோஷ காலமென்பது

"பகல் முடிந்து அந்திநேரம் முதல் வானில் நிலவு, நட்சத்திரங்கள் உதயமாகும் வேளை வரையுள்ள காலமென்பார்கள். அதாவது மாலை 5.45 மணி முதல் 6.30 மணி முடியவுள்ள காலமே பிரதோஷ காலம்"

**மாதப் பிரதோஷங்கள்**

ஒவ்வொரு மாதமும் அமாவாசையிலிருந்து 13 ஆம் நாளும் பௌர்ணமியிலிருந்து 13 ஆம் நாளும் திரயோதசி திதியாகும். அன்றுதான் பிரதோஷ நாளாகும். ஆக மாதத்தில் இரு பிரதோஷ நாட்கள் வருகின்றன.

**பிரதோஷ வகைகள்**

பிரதோஷங்கள் ஐந்து வகை

**01. நித்திய பிரதோஷம்**

அனுதினமும் சூரியன் கிழக்குத் திசையில் உதயமாகி மேற்குத் திசையில் அஸ்தமனமாகின்றார். அவ்வாறு சூரிய அஸ்தமனமாதற்கு மூன்று நாளிகைக்கு முன்புள்ள காலம் முதல் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் தோன்றும் காலம் வரையுள்ள சந்தியா வேளையே நித்தியப் பிரதோஷம் என அழைக்கப்படுகின்றது. இந்த வேளையில் தான் மகாவிஸ்ணு இரண்யகாசுரனை வதம் புரிந்ததால் இதனை இரண்ய வேளை எனவும் வழங்கப்படுகின்றது.

**02. பட்சப் பிரதோஷம்**

மாதந்தோறும் வளர்பிறைக் காலத்தில் வரும் சதுர்த்தித் திதிநாளில் மாலை நேரத்தைப் பட்சப் பிரதோஷம் என்பர்

**03. மாதப் பிரதோஷம்**

மாதந்தோறும் தேய்பிறைக் காலத்தில் வரும் திரயோதசித் திதிநாளில் மாலை நேரத்தை மாதப் பிரதோஷம் என்பர்

**04. மகா பிரதோஷம்**

மாதந்தோறும் வரக்கூடிய தேய்பிறைத் திரயோதசித் திதியானது சனிக்கிழமைகளில் வரப்பெற்றால் அதுவே மகா பிரதோஷமாகும். இதுவே மிகச் சிறந்த பிரதோஷமாகும். இதனைச் சனிப்பிரதோஷம் என்பார்கள்

**05. பிரளயப் பிரதோஷம்**

என்றைக்காவது ஒருநாள் அனைத்து உலகங்களும் மகா பிரளயம் எனும் பெருவெள்ளத்தால் மூழ்கிவிடக்கூடும். அவ்வேளை அவையாவும் ஆண்டவனித்தே ஐக்கியமாகிவிடும். அக்காலமே பிரளயப் பிரதோஷம் என்பர்.

இவற்றைத் தவிர பிரதோஷத்தை

- **உத்தம மகாப் பிரதோஷம்**

சிவபெருமான் ஆலகால விசம் பருகிய தினம் சனிக்கிழமையாகும். அதனால் அந்த சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம் மிகவும் சிறப்புடையதாகும். சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வளர்பிறை சனிக்கிழமைகளில் திரயோதசி திதியில் வரும் பிரதோஷம் உத்தம மகாப் பிரதோஷமாகும். இதுவே மிக்க பலன் தரும் உயர்ந்த பிரதோஷ நாளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மத்திம மகாப் பிரதோஷம்


சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் தேய்பிறை திரயோதசியுடன் கூடிய சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷ காலங்கள் மத்திம மகா பிரதோஷங்கள் எனப்படுகின்றது.

### அதம மகாப் பிரதோஷம்

ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில் வரும் வளர்பிறை, தேய்பிறை திரயோதசியுடன் கூடிய சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷங்கள் அதம மகாப் பிரதோஷங்கள் ஆகும்.

இவை மூன்றிலும் உத்தம மகாப் பிரதோஷ தினங்களே மிகவும் நற்பலன்களைத் தரவல்லதாகும்.

## பிரதோஷ நாளில் வலம் வரும் முறை




பிரதோஷ நாளில் மட்டும் ஆலயத்தை வலம் வரும் போது அப்பிரதட்சணையாக வலம் வருதல் வேண்டும். இதை சோம சூத்ர பிரதட்சணம் எனவும் அழைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில்

01. நந்தி தேவரைத் தரிசிக்க வேண்டும்.
02. அங்கிருந்து இடப்புறமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசிக்க வேண்டும்.
03. பின்ன் வந்த வழியே மீண்டும் நந்திதேவரை வழிபட வேண்டும்.
04. அங்கிருந்து வலப்புறமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்த கோமுகையைக் கடக்காமல் வந்த வழியே மீண்டும் வந்து நந்திதேவரை வணங்க வேண்டும்.
05. பின் இடது புறமாகச் சென்று சண்டேஸ்வரரை மீண்டும் வணங்கி வலது புறமாகச் சென்று கோமுகையை அடைந்து பிறகு நந்திதேவரை வணங்கிட வேண்டும்.
06. இறுதியாக இடதுபுறமாகச் சென்று மீண்டும் சண்டேஸ்வரரை வணங்கி வந்த வழியே திரும்பி வந்து நந்திதேவரை மனம், மொழி, மெய்களால் மாசில்லாது வணங்கிய பின்னர் அவருடைய இரண்டு கொம்புகளுக்கிடையே சிவ சிந்தனையுடன் ஹர ஹர மகாதேவா என்று ஜபித்துக் கொண்டே லிங்கேஸ்வரர் ஆகிய சிவபெருமானை வணங்கிட வேண்டும்.

இவ்வாறு மூன்று தடவைகள் பிரதட்சணம் செய்வதே முறையாகும்.

**பிரதோஷ நாளில் அப்பிரதட்சணம் வரும் தாத்பர்யம்**

அமிர்தம் பெற வேண்டி தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலில் மந்திர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்மைக் கயிறாகவும் கொண்டு அக்கடலைக் கடைந்தார்கள். அப்போது வாசுகி கக்கிய ஆலகால விசத்தின் கொடுமை தாங்காத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட திருக்கயிலாயம் நோக்கிச் சென்றார்கள். வலது பக்கம் விசத்தின் புகைமண்டலம் சூழ்ந்து கொண்டதால் இடதுபுறமாக சுற்றிச் சென்று திருக்கயிலை மலையை அடைந்தனராம். அதன் அடிப்படையில்தான் பிரதோஷ நாளில் அப்பிரதட்சணம் பின்பற்றப்படுகின்றது என்பது ஐதீகம்.

**பிரதோஷ வழிபாட்டின்போது கட்டாயம் பின்பற்ற வேண்டியவை.**

☞ பிரம்ம முகூர்த்த வேளையில் ( அதிகாலை ) துயில் எழ வேண்டும்.
☞ நன்னீராடி மடியுடுத்திக் கொள்ள வேண்டும்.
☞ நெற்றியில் திருநீறு, சந்தனம், குங்குமம், தரித்துக் கொள்ள வேண்டும்.
☞ கழுத்தில் ருத்திராட்ச மணிமாலை அணிந்து கொள்ள வேண்டும்.
☞ பிரதோஷ நாளில் முழு உபவாசம் அனுஸ்டிப்பது நல்லது.
☞ அன்றைய தினம் சிவபுராணம், சிவநாமாவளிகள், சிவதோத்திரங்கள் பாராயணம் செய்வது நன்மை தரும்.
☞ பொதுவாக சிவசிந்தனையோடு இருப்பது நல்லது.
☞ மாலையில் மீண்டும் நீராடி மடியுடுத்தி, சிவசின்னங்கள் தரித்துக் கொள்ள வேண்டும்.
☞ தமது இல்லத்தில் நந்திதேவருடன் கூடிய சிவலிங்கம் இருக்குமாயின் அவற்றிற்கு அபிஷேகம் செய்து வில்வ இலைகளினால் அர்ச்சனை செய்து வழிபடலாம்.
☞ அவ்வாறு இல்லையாயின் மாலையில் பிரதோஷ வேளையில் ஏதேனும் சிவாலயத்திற்குச் செல்ல வேண்டும்.
☞ சிவலிங்கப் பெருமானுக்கும் நந்திதேவருக்கும் நடாத்தப்படும் அர்ச்சனைகளை கண்டுகளிக்க வேண்டும்.
☞ நந்திதேவருக்கு அருகம்புல் மாலை அல்லது கரும்புத் துண்டுகளாலான மாலையை அணிவிக்கலாம்.
☞ மாவினால் அகல்விளக்கு அமைத்து, அதில் பசுநெய் விட்டு பஞ்சுத் திரிபோட்டு விளக்கு ஏற்ற வேண்டும்.
☞ கார் அரிசியில் வெல்லமிட்டுப் பிசைந்து நந்திதேவருக்கு நிவேதனமாகப் படைக்க வேண்டும்.
☞ முறைப்படி ஆலயத்தை சுற்றி வரவேண்டும்.
☞ சிவலிங்கத்திற்கு தீபாராதனை முடிந்தபிறகு நந்திதேவரின் காதருகே சென்று மற்றவர்களுக்குக் கேட்காதவாறு நம் குறை விலகி, நிம்மதி பெற வேண்டிக் கொள்ள வேண்டும்.

( இவ்வாறு பன்னிரண்டு பிரதோஷ நாட்களில் கூறி வந்தால் பலன் கிடைக்கும் என்பது உண்மை )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹர ஹர மகாதேவா! சாம்ப சதாசிவா!
உலக நலனுக்காக விடம் உண்ட கண்டனே!
ஏகாம்பரனே! எங்கள் இடர் களைந்து,
வாழ்வில் இன்பம் ஊட்டிக் காப்பாயாக!"
( என வேண்டிக் கொள்ள வேண்டும் )

☞ வீடு திரும்பியதும் ஒருவருக்கேனும் அன்னமிட்டு பின்னர் தாமும் உண்டு விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

## பிரதோஷ வழிபாட்டின் பலன்

"இரண நல்கிர வீடும்பவ றிம்பசி யுரோகம்
அரணுறும் பயங் கிலேசங் கேதமல இருந்து
மரண வேதனை இவையெலா மகற்றென வணங்கி
பணநாகனைப் பிரதோடத்திற் போற்றிடத் தகுமால்"

கடம்பவ புராணம் -

பிரதோஷ வழிபாடு செய்தால் கடன், வறுமை, கொடிய பாவம், கொடிய பசி, ரோகம், பயம், மரண வேதனை யாவும் விலகி நலன் உண்டாகும்.



திரு. மோகானந்தம் அஷோக்குமார்,
0771960008
ஆசிரியர்
தி/கந்/ பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம்
கந்தளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சைப் பெருங்கோவிலின் சிறப்புக்கள்

தஞ்சைப் பெருவுடையார் கோயில் அல்லது தஞ்சைப் பெரிய கோயில் என அறியப்படும் இத்தலம் தஞ்சாவூரில் உள்ள சோழ நாட்டு காவிரி ஆற்றின் தென் கரையில் அமைந்துள்ள திருவிசைப்பா பாடல் பெற்ற சிவன் கோயில் ஆகும். இக்கோயில் உலகப் பராம்பரிய சின்னமும் ஆகும். இது 10ம் நூற்றாண்டில் புகழ் பெற்ற தமிழ் சோழப் பேரரசர் முதலாம் இராஜ இராஜ சோழனால் இக் கோயில் கட்டுவிக்கப்பட்டது. 1003-1004ம் ஆண்டு தொடங்கி 1010 ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இக் கோயிலுக்கு 2010 ஆவது ஆண்டோடு 1000 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இக் கோவிலில் தமிழின் சிறப்புக்களும் மாமன்னர் இராஜ இராஜ சோழனின் தமிழ்ப் பற்றும் கோயிலில் உள்ள சிவலிங்கத்தின் உயரம் 12 அடி தமிழின் உயிர் எழுத்துக்கள் 12 சிவலிங்கத்தின் பீடத்தின் உயரம் 18 அடி தமிழின் மெய் எழுத்துக்கள் 18 கோயிலின் கோபுர உயரம் 216 அடி தமிழின் உயிர் மெய் எழுத்துக்கள் 216 சிவலிங்கத்திற்கும் நந்திக்கும் இடையிலுள்ள இடைவெளி 247 அடி தமிழ் மொழியின் மொத்த எழுத்துக்கள் 247 ஆகும்.

அது போன்று இரண்டு அல்லது மூன்று தளங்களை மட்டுமே கொண்டு கோயில் கட்டப்பட்டு வந்த காலத்தில் கற்களே கிடைக்காத காவேரி சமவெளிப் பகுதிகளில் 12 தளங்கள் கொண்ட சுமார் 60m உயரமான ஒரு கற்கோயிலை இராச இராசன் எழுப்பினான். இத்தகைய ஒரு பிரமாண்டமான கோயில் சுமார் 7 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது.

கருவறையில் உள்ள சிவலிங்கம் உலகிலேயே பெரிய சிவலிங்கமாகும். 6 அடி உயரம் 54 அடி சுற்றளவு கொண்ட ஆவுடையார், 23 1/2 அடி உயரம் கொண்ட லிங்கம் ஆகியன தனித்தனியாக கருங்கற்களால் செதுக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான நந்தி சிலையின் உயரமும் அகலமும் முறையே 13 அடி மற்றும் 16 அடியாகும். தஞ்சை பெரிய கோவிலுக்கு பெருமை சேர்க்கும் வகையில் மத்திய அரசு சார்பாக கடந்த 1954 ஏப்ரல் 1ம் திகதி 1000/= நாணயத்தாளை வெளியிட்டது. அதில் தஞ்சை பெரிய கோவில் எனப்படும் பிரகதீசுவரர் ஆலயத்தின் வியத்தகு தோற்றம் பதிக்கப்பட்டது இவ்வாறு தஞ்சைப் பெரிய கோவிலின் சிறப்பு போற்றுதலுக்குரியது.

வி.துவாரகா
12 உயர்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் திசைகள் யானைகள்

இந்து மதத்தை சிறப்பிக்கும் வகையிலும் வேதங்கள் மற்றும் உபநிடதங்களை கதையாகப் புரிந்து கொள்ளும் வகையிலும் உருவாக்கப்பட்டவைதான் புராணங்கள், இவற்றில் 18 மகா புராணங்கள் 18 உப புராணங்கள் உள்ளன.பெரும்பாலான புராணங்களில் இந்திரனின் வாகனமாக இருக்கும் ஐராவதம் என்ற வெள்ளை யானை திருப்பாற் கடலை கடையும் போது சமுத்திரத்தில் இருந்து வெளிப்பட்டது என்றே கூறப்படுகின்றது.

இன்னும் சில புராணங்கள் வேறு உருவ கதையையும் சொல்கின்றன. அதன்படி மண்ணால் ஒரு உருண்டையைச் செய்த பிரம்மதேவன் அதன் மீது சில மந்திரங்கள் பிரயோகித்தார் அந்த மண் உருண்டையை தேவலோகத்தில் இருந்த அதிதி என்ற பெண் சாப்பிட்டு விட்டாள் சுமார் 1000 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த உருண்டை அதிதியிடம் இருந்து வெளிப்பட்டது.

இணைடாகப் பிரிந்த அந்த உருண்டைக்கு பிரம்மன் உருவம் தந்து உயிர் கொடுத்தார். ஒன்று ஐராவதம் என்ற ஆண் யானையாகவும் மற்றொன்று அபுரமு என்ற பெண் யானையாகவும் மாறின. இவ்விரு யானைகளும் வெள்ளை நிறத்துடன் நான்கு தந்தங்களைக் கொண்டிருந்தன. அத்தோடு அவற்றுக்கு இறக்கைகளும் இருந்தது.

இந்த யானைகளுக்குத் துணையாக மேலும் 7 ஜோடி யானைகளை பிரம்மதேவன் படைத்தார். அந்த எட்டு யானைகளும் எட்டுத் திசைகளையும் காத்து நிற்பதாக சொல்லப்படுகின்றது. அவை "அஷ்டகித் கஜங்கள்" என அழைக்கப்படுகின்றன.

அவை

ஐராவதம் - அபுரமு – கிழக்கு
அஞ்சனன் - அஞ்சனாவதி – மேற்கு
சர்வபவுமான் சுப்ரதந்தி – வடக்கு
வாமனன் - அங்கனா – தெற்று
பண்டரிகன் - கபிலா – தென்கிழக்கு
புஷ்பதந்தன் - தமரகர்ணி – வடமேற்கு
சுப்ரதீன் - அனுபமா – வடகிழக்கு
குமுதன் - பொங்கலா – தென்மேற்கு

T. தனுக்ஷன்
12 உயர்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. சிவன்

சிவன் இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள மும்மூர்த்திகளுள் ஒருவர். சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகவும் பிறப்பும் இறப்பும் அல்லாத பரம்பொருளாதலால் “பரமசிவன்” எனவும் அழைக்கின்றனர். இவர் தனது ஒரு பகுதியிலிருந்து அன்னை பராசக்தியை உருவாக்கினாரெனவும் பின்னர் இருவரும் இணைந்து ஆனந்தத் தாண்டவமாடி அண்டசராசரங்களை உருவாக்கினார்களெனவும் தனது உடுக்கையிலிருந்து படைத்தல்,காத்தல், அழித்தல்,மறைத்தல், அருளல் எனும் ஐந்து பணிக்கும் அடிப்படையாயின. ஓம் என்ற பிரணவ மந்திரத்தை உருவாக்கினார் எனவும் கூறப்படுகின்றது. பின்னர் அன்னை பராசக்தி படைப்பிற்காக பிரமம்தேவரையும் அதன் பின் காப்பதற்கு காக்கும் கடவுளான விஷ்ணுவையும் உருவாக்கினார் என்று கருதப்படுகின்றது. கடவுள்களில் ஊழி காலத்தில் இவர் மட்டுமே நிலைத்திருப்பவராதலால் சதாசிவன் எனப்படுகின்றார். சிவனின் இடப்புறத்தில் இருந்து விஷ்ணுவும் வலப்புறத்திலிருந்து பிரம்மரும் உருவானார்கள் என்று திருமாலின் அவதாரங்களில் ஒருவரான வேதவியாசர் கூறுகின்றார். பிரம்மன் தன்னால் படைக்கப்பட்ட உயிர்களை அழிக்க ஈசனிடம் வேண்டி நிற்க பிரம்மரின் மகனாக மும்மூர்த்திகளில் ஒருவரான உருத்திரன் உதித்தார் என்று வாயு புராணம் கூறுகின்றது.

அதிபதி – யாவற்றுக்கும் சைவ , அழித்தல் முழுமுதல்

வேறுபெயர்கள் - ஈசன், அம்மையப்பன், மகாதேவன், முக்கட்செல்வன், இன்னும் பல

சமசுகிருதம் - சிவ

தமிழ் எழுத்து முறை – சிவன்

வகை – மும்மூர்திகள்

இடம் - கயிலை மலை

மந்திரம் - ஓம் நமசிவாய

ஆயுதம் - திரிசூலம், மான்,மழு

துணை – பார்வதி (சக்தி / காளி / துர்க்கை)

குழந்தைகள் - விநாயகர் முருகன் அசோக சுந்தரி

வாகனம் - நந்தி

நூல்கள் - சைவ நூல்கள்

சமயம் - சைவம்

விழாக்கள் - சிவராத்திரி, பிரதோஷம்

## 2. ஆதிசக்தி (தொன்மங்கள்)

சைவ மரபில் சிவன் சக்தி ஆகிய இரண்டும் ஒரு பெருமுழுமையின் ஒன்றிலொன்று இன்றியமையாத இரு அம்சங்களாகும். அவற்றைப் பரமசிவம் ஆதிசக்தி என நோக்கும் சைவர்கள், அந்த இரு போற்றல்களில் திருவிளையாடல்களாகவே புராணக் கதைகளை நோக்குகின்றனர். தக்கனின் தவத்தால் அவனுக்கு மகனாகப் பிறக்கும் ஆதிசக்தி “சதிதேவி” என அறியப்படுகின்றாள். தக்கனின் அனுமதியின்றி சதி சிவனை மணந்ததால் வெகுண்ட தக்கன் அவர்களுக்கு அழைப்பு விடுவிக்காமல் யாகம் செய்கின்றான் .அங்கு அழைப்பின்றி வந்த சதிதேவியிடம் தக்கன் ஈசனை இழித்துப் பேசுவதால் சதி வேள்வித்தீயில் விழுந்து மறைய ஆங்ககாரமுற்ற ஈசனின் திருமுடியிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபத்திரர் தோன்றி யாகத்தை அழிக்கின்றார்.சதியின் உடல் யாக குண்டத்தில் கிடந்ததாகவும் அதை ஆற்றாமையுடன் ஈசன் தூக்கிச் சென்ற போது அவற்றை திருமால் ஆழியாமல் சிதைத்து அவை வீழ்ந்த இடங்களே சக்தி பீடங்களானதாகவும் இக்கதை சொல்கின்றது. பின் பர்வத அரசன் மைனாவதியின் தவத்துக்கிரங்கி சக்தி மீண்டும் பார்வதியாக அவதரிக்கின்றார். கடுந்தவமிருந்து ஈசனை கணவனாக அடையும் உமையவள் பின் பல அசுரர்களை அழித்து தேவர் துயர் தீர்த்தும் பிள்ளையார்,முருகன் ஆகியோரை படைத்தும் ஈசன் தேவியாக வீற்றிருக்கின்றாள்.

புகழ் பெற்ற சிவத்தலங்கள்

சிவபெருமானை மூலவராகக் கொண்டு உலகம் முழுவதும் கோயில்கள் இருக்கின்றன. குறிப்பாக கம்போடியா, நேபாளம், இலங்கை, இந்தியா எனப் பல நாடுகளைக் கூறலாம்.இவற்றினை விடவும் பாரதக் கண்டம் என அழைக்கப்படுகின்ற இந்தியாவில் அநே சிவாலயங்கள் உள்ளன.அடிப்படையில் பஞ்சபூதத் தலங்கள் பஞ்ச சகோதரத் தலங்கள், பஞ்ச தாண்டவத் தலங்கள் பஞ்ச குரோசத் தலங்கள், ஆறு தோர தலங்கள் சப்த விடங்க தலங்கள், சப்த கரை சிவத்தலங்கள், சப்த கைலாயத் தலங்கள், அட்ட வீரட்டானத் தலங்கள், நலவிங்கபுரம் நவகைலாயங்கள் எனவும் சைவ அடியார் களால் பாடல் பெற்றதைத் கொண்டு தேவாரத் திருத்தலங்கள் திருவாசகத் திருத்தலங்கள், தேவார வைப்புத் தலங்கள், திருச்சிற்றம்பலக் கோவையார் திருத்தலங்கள்,எனவும் வன விசேசத் தலங்கள் முக்தி தரவல்ல சிவத்தலங்கள் சோதிர்லிங்கத் தலங்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன. விரதம் எப்பொழுது சோமவார விரதம்திங்கட்கிழமைகளில் இருப்பதுஉமா மகேசுவர விரதம்கார்த்திகை பௌர்ணமியில் இருப்பது திருவாதிரை விரதம் மார்கழி மாதத்தில் வருவது சிவராத்திரி விரதம் மாசி மாத அமாவாசையில் வருவதுகல்யாண விரதம்பங்குனி உத்தரத்தன்று கடைப்பிடிப்பது பாசுபத விரதம் தைப்பூசத்தன்று வருவது அட்டமி விரதம் வைகாசி மாத பூர்வபட்ச அட்டமியில் அனுஷ்டிப்பது கேதாரகௌரி விரதம் ஐப்பசி அமாவாசையை ஒட்டி (தீபாவளி தினத்தன்று) வருவது இவற்றில் தேவாரப் பாடல் பெற்ற தலமானது காவிரி தென்கரைத் தலங்கள் காவிரி வடகரைத் தலங்கள் பாண்டிய நாட்டுத் தலங்கள் கொங்கு நாட்டுத் தலங்கள் தொண்டை நாட்டுத் தலங்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சிவ விரதங்கள்

சிவபெருமானுக்காக சைவர்கள் எட்டுவகையான விரதங்களை இருந்து வழிபாடு செய்கின்றனர். இவ்விரதங்கள் மூலம் சிவனின் பரிபூரண அருளினை பெற இயலும் என்று சைவர்கள் நம்புகின்றனர்.

| விரதம் | எப்பொழுது |
|---|---|
| சோமவார விரதம் | திங்கட்கிழமைகளில் இருப்பது |
| உமா மகேசுவர விரதம் | கார்த்திகை பௌர்ணமியில் இருப்பது |
| திருவாதிரை விரதம் | மார்கழி மாதத்தில் வருவது |
| சிவராத்திரி விரதம் | மாசி மாத அமாவாசையில் வருவது |
| கல்யாண விரதம் | பங்குனி உத்தரத்தன்று கடைப்பிடிப்பது |
| பாசுபத விரதம் | தைப்பூசத்தன்று வருவது |
| அட்டமி விரதம் | வைகாசி மாத பூர்வபட்ச அட்டமியி அனுஷ்டிப்பது |
| கேதாரகௌரி விரதம் | ஐப்பசி அமாவாசையை ஒட்டி (தீபாவ தினத்தன்று) வருவது |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவனே

தூக்கி வைப்பதும் அவனே
உனை தூக்கி
சுமப்பது அவனே
நம்பிக்கையுடன் ஓடு
நிழலாய் அவன் வருவான்
உனைக் காத்திடுவான்
நெஞ்சில் அவனே
என்றும் சிவனே

முக்கண்ணா என்றழைத்தேன்
வரவில்லை
பரம்பொருளே என்றழைத்தேன்
வரவில்லை
உலக முதல்வனே என்றழைத்தேன்
வரவில்லை
தந்தையே என்றழைத்தேன்
என் கண் முன்னே தோன்றினாய்
என் அப்பன் நீ அல்லவா

R. அபிநயா
12 உயர்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை



மகா கும்பாபிஷேக மலர் சிறப்புற அமைவதற்கு ஆய்வுக் கட்டுரைகள் வாழ்த்துச் செய்திகள் ஆசிச் செய்திகள் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் திருகோணமலையில் அமைந்துள்ள AR அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவாலய நிர்வாக சபையினர்
சிவாலயம்
பேராறு
கந்தளாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவாய் நீ
வேண்டும் அயன்மாற் கறிவோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய் நீ
வேண்டி நீயாதருள் செய்தாய் நீ
யாதும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரி கொன்றுண்டெனில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்
(மாணிக்கவாசக சுவாமிகள்)

அச்சுப்பதிப்பு : ஏ.ஆர்.பிரிண்டர்ஸ், திருகோணமலை 0776566173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org